விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள் : இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 12 செவ்வாய்க்கிழமை (27.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 344

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளது

### குற்றம் சாட்டுகிறார் சந்திரிகா

(கொழும்பு)


இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து நாட்டில் பாரியளவில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க குற்றம் சுமத்தியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



## செயற்கைக்கோள் இன்று ஏவப்படும்

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது தொலைத் தொடர்பு செயற்கைக் கோளான (சற்லைட்) சுப்றீம்செற்




இன்று செவ்வாய்க்கிழமை விண்ணுக்கு ஏவப்படவுள்ளது. இதற்கான (20ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டி விற்றவர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கார்த்திகை விளக்கீட்டுக்காக சுட்டி விளக்குகள் விற்பனை செய்து கொண்டிருந்த வர்த்தகர் ஒருவர் மீது யாழில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

திருநெல்வேலிப்பகுதியில் சுட்டி விளக்குகள் விற்றுக் கொண்டிருந்த வர்த்தகர் மீதே இவ்வாறு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது.

அதிகாரம் மிக்கவர்கள் எனத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட இனந்தெரியாத சிலரே அந்த வர்த்தகர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.30மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்தசம்பவம்தொடர்பில்மேலும் தெரிய வருவதாவது, கார்த்திகை விளக்கீட்டை முன்னிட்டு திருநெல்வேலிப் (20ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது!

(கோலாலம்பூர்)

மலேசியாவில் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக நடத்த திட்டமிடப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தை விலக்கிக் கொள்ள தீர்மானித்துள்ளதாக மலேசியாவின் அரச சார்பற்ற அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மலேசியப் பயணம் இடம்பெறாதென்றுஅறிவிக்கப்பட்டநிலையிலேயே இந்த முடிபு எடுக்கப்பட்டதாக அந்த அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

டிசம்பர் 4ஆம் திகதி கோலாலம்பூரில்ஆரம்பமாகும்உலகஇஸ்லாமிய பொருளாதார மாநாட்டில் பங்கேற்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து இலங்கையின் இனப்படுகொலைகளுக்கு பொறுப்பான அவரை அனுமதிக்கக் கூடாது என்று மலேசிய அரசாங்கத்தை கோரும் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமைகள் குறித்து கூட்டமைப்புடன் அமெரிக்கா பேசும்

(நியூயோர்க்)

அமெரிக்கா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அடுத்த அமர்வுகளுக்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்த உள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எவ்வாறு இலங்கை அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளது என்பதனை அறிந்து கொள்ளும் நோக்கில் இந்தப் பேச்சுவார்த்தைகள் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் மார்ச் மாதம் நடைபெற்ற மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிராக (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் கவுன்ஸிலின் சேவை யாழிற்கு விஸ்தரிக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் கவுன்ஸிலின் யாழ்ப்பாணம் கிளை அலுவலகம் 2013-ம் ஆண்டு முற்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளதாக பிரிட்டிஷ் கவுன்சிலின் தெற்காசியப் பிராந்திய பணிப்பாளர் ஸ்ரீபன் ரோமன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பின் போது பிரிட்டிஷ் கவுன்ஸிலின் இலங்கைப் பணிப்பாளர் ரோனி ரீலி, பிரதிப்பணிப்பாளர் பவுள் கில்பெர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச்சந்திப்பில் ரோமன் மேலும் தெரிவிக்கையில், பிரிட்டிஷ் கவுன்சில் 60 வரு (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி செல்ல முயற்சித்த 90 பேருக்கு விளக்கமறியல்

(காலி)

தென் கடற்கரைப் பிரதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த போது கைது செய்யப்பட்ட 90 பேரையும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

காலி நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்திய போதே அவர்களை (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அமைச்சரவை மீளமைக்கப்படவுள்ளது!

(கொழும்பு)

இலங்கை அமைச்சரவை மீளமைப்பு செய்யப்படவுள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மீளமைப்பு பெரும்பாலும் டிசம்பர் மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் இடம்பெற வாய்ப்புள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அமைச்சரவை மீளமைப்பின்போது பல்வேறுபட்ட அமைச்சுக்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கல்வி, மின்சக்தி, வெளிவிவகார, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு விவகாரத்துறை உள்ளிட்ட அமைச்சுக்கள் சிலவற்றில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்ற எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் டி.எம்.ஜயரட்ண சுகவீனம் காரணமாக அமெரிக்க மருத்துவமனையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## கடற்றொழிலாளர் சங்கங்களின் மாபெரும் கண்டன பேரணி

### நாளை மறுதினம் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத்தின்ஏற்பாட்டில்மாபெரும் கண்டனப் பேரணியொன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கோவில் வீதி புனித டொன் பொஸ்கோ ஆரம்பப் பாடசாலை முன்றலில் (ஐ.சி.ஆர்.சி சந்தி நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் பேரணி ஏற்பாட்டாளர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

யாழ்.மாவட்டத்தின் கடற்பகுதிகளில் இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப் (20ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று சடலங்கள் கொழும்பில் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு ஆமர்வீதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து மூன்று சடலங்கள் நேற்றிரவு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாய், தந்தை மற்றும் இரண்டரை வயதான ஆண் பிள்ளையொன்றின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணங் (19ஆம் பக்கம் பார்க்க)

## கார்த்திகை வழிபாடுகளில் இராணுவத் தலையீடு

### கூட்டமைப்பு விசனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சில பிரதேசங்களில் இந்துக்கள் இம்முறை கார்த்திகை தீபமேற்றல் மற்றும் ஆலய பூசை வழிபாடுகளில் பாதுகாப்பு தரப்பிலிருந்து தலையீடுகளையும் தடைகளையும் எதிர்கொள்வதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் மாவீரர் தினமாகிய நவம்பர் மாதம் 27ம் திகயன்றே (இன்று) இம்முறை குமாராலய தீப (19ஆம் பக்கம் பார்க்க)


## 'எத்தனை தடைகள் வரினும் எமது மாவீரர்களின் இலட்சியத்தை மீட்போம்'

### யாழ். பல்கலையில் நேற்று சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்ததினம்மற்றும்மாவீரர்தினத்தை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததனை அவதானிக்க முடிந்தது.

குறித்த சுவரொட்டிகள் விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்திற்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வகையிலும் தமிழீழத்தை வலியுறுத்தும் வகையிலும் காணப்பட்டிருந்தன. பல்கலைக்கழக வளாகத்தின் கலைப் பீடம், விஞ்ஞான மற்றும் முகாமைத்துவ பீடங்



களிலும் மாணவர் ஒன்று கூடும் இடம், சிற்றுண்டிச்சாலை, அறிவித்தல் பலகைகள் எனப் பல இடங்களிலும் ஒட்டப்பட்டிருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது.

எனினும் நேற்று மதியத்திற்குப் பின்னர் (20ஆம் பக்கம் பார்க்க)

## குஜராத் தேர்தல் களத்தில் வன்னி அவல ஒளிப்படம்!

### சர்ச்சையில் சிக்கியது காங்கிரஸ்

(காந்திநகர்)

இந்தியாவின் குஜராத் மாநில சட்டமன்றத் தேர்தலில், வன்னிப் போரின் போது எடுக்கப்பட்ட படத்தை காங்கிரஸ் கட்சி பயன்படுத்தியுள்ள விவகாரம் பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.


பாஜக ஆளும் குஜராத் மாநிலத்தில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு உள்ளதை சுட்டிக்காட்டும் தேர்தல் விளம்பரம் ஒன்றை காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது.

அந்த விளம்பரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட குழந்தை ஒன்றின் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# 200 ஆண்டு பழமையான இந்து ஆலயம் புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

200 ஆண்டுகள் பழமையான இந்து ஆலயம் யாழ்ப்பாணம் கோட்டை வளாகத்தினுள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்று வழிபாடுகள் இடம் பெற்றன. யாழ்ப்பாணக் கோட்டையில் பணிபுரிந்த தமிழர்களினால் இந்த ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடுகள் இடம் பெற்று வந்ததாகவும் பின்னர் காலப்போக்கில் அந்த ஆலயம் அழிவடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் குறித்த ஆலயம் மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்று விசேட வழிபாடுகள் இடம் பெற்றுள்ளன. தொல்லியல் திணைக் களத்தினால் குறித்த ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆலயம் 200 ஆண்டுகள் பழைமையானது என்பதற்கு தன்னிடம் ஆதாரங்கள் உள்ளதாக தெரிவித்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்.

இறந்தவர்களை வழிபடும் முறை அந்தக் காலப்பகுதியில் இருந்ததாகவும் இதன் பொருட்டே கோட்டையில் இந்த வைரவர் ஆலயம் அமைத்து வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் தெரிவித்தார். (ந-6)

## நிலா முற்றம் பகுதி II - நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

நீரிழிவு நோயின் அறிகுறிகளும் அதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகளும் என்ற தொனிப் பொருளில் நிலாமுற்றம் பகுதி II என்ற நிகழ்வு இன்று காலை 10 மணிதொடக்கம் 12 மணிவரை இல. 82, பிறவுண் வீதி (நீரர்வியடி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக) உள்ள Nation Popular Travels & Tours இன் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவதுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி விவியன் சத்தியசீலன் சித்த ஆயுள்வேத மருத்துவர் ஜெயலன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (ந-8)

# வடபகுதி கடற்பரப்பில் கடல் அட்டை பிடிப்பதற்கு அனுமதி

வடபகுதி கடற்பரப்பில் கடல் அட்டை பிடிப்பதற்கு கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

நீண்டகாலம் இத்தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் மட்டும் கடலட்டை பிடிக்கலாம் என்று கடற்தொழில் நீரியல்வளத்திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் ந. கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கடலட்டை பிடிப்புத் தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் தங்கள் பகுதி கடற்தொழிலாளர் சங்கங்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என்றார்.

அத்துடன் கடல் அட்டை பிடிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் கண்ணாடி மற்றும் காலணி என்பவற்றைப் பயன்படுத்தி பிடிக்க முடியும் என்றும் ஒட்சியன் சிலிண்டர் கொண்டு பிடிப்பவர்கள் தங்களுக்கான அனுமதியினை நீரியல் வள அமைச்சின் ஊடாக பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

மேலும் அவ்வாறு தேவைப்படுபவர்கள் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டால் அமைச்சின் அனுமதி பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உதவிப்பணிப்பாளர் ந. கணேசமூர்த்தி குறிப்பிட்டார். (ந-1)


ஆசிரியர் முத்துலிங்கத்தின்
EASY ENGLISH
விபரங்கள் + பெயர்பதிவு : 773212711 மூலம்
(936)

**ஒளிவிழா பிற்போடல்**

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் 29.11.2012 நடைபெற இருந்த ஒளிவிழா தவிர்க்கமுடியாத காரணத்தால் 04.12.2012 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றோம்.

கல்லூரிச் சமூகம்
(1045)

செல்லா சினிமா யாழ்ப்பாணம்






விஜய், காஜல் அகர்வால் மற்றும் பலர் நடிப்பில்
10.30, 2.30, 6.30, 9.30

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
24 வருட அனுபவம்
Nov 2012-Apr 2013
தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.alimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 10.12.2012


# இனப்பிரச்சினைகளை உருவாக்க விமல் வீரவன்ச முயற்சிக்கிறார்

### ஆளும் கட்சி உறுப்பினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் இனப்பிரச்சினைகளை ஏற்படுத்த அமைச்சர் விமல் வீரவன்ச முயற்சித்து வருவதாக மத்திய மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் உஜித் அனுரா தெரிவித்துள்ளார்.

13ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்தால் நாட்டில் மீண்டும் போர் மூளக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. இவ்வாறு மாகாணசபை முறைமையை ரத்து செய்யுமாறு கோரி வரும் விமல் வீரவன்ச போன்ற தரப்பினருக்கான ஆதரவு வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

மாகாணசபை முறைமையை விமர்சனம் செய்யும் தரப்பினர் மாகாண சபை முறைமையின் சகலநலன்களையும் அனுபவித்து வருகின்றனர்.

நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்குத்தீர்வு காணும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவினால் இந்த முறைமை அறிமுகம் செய்யப்பட்டது.

வேலை செய்ய முடியாத சில அரசியல்வாதிகள்மாகாண சபை முறைமையை குறை சொல்கின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ந-1)


வாழும் கலைப் பயிற்சி



மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம், சுதர்சனகிரியா, யோகா, தியானம்
27.11.2012 – 02.12.2012 வரை
5am - 7.30 am
10am - 12.30pm
3pm - 5.30pm
6pm - 8.30pm
மகேஸ்வரன் மணி மண்டபம் (நல்லூர்)
தொ.பே: 0770474757 ,0777607008
(1044)

ஓம் நமோ நாராயணாய



முள்ளியவளை, கணுக்கேணி
பூலஷ்மி மகாலஷ்மிசமேத மாமூலை
ஸ்ரீ மஹா விஷ்ணு ஆலய
மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்
28.11.2012

24.11.2012 சனிக்கிழமை காலை 6.00 மணி முதலாக கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எண்ணெய்காப்பு 27.11.2012 செவ்வாய்க்கிழமை 28.11.2012 புதன்கிழமை காலை 11.48 மணி முதல் 12.05 வரையுள்ள சுப முகூர்த்த நேரத்தில் விநாயகருக்கும் மூலமாக உறையும் பூலஷ்மி மகாலஷ்மி சமேத ஸ்ரீ மஹா விஷ்ணு பெருமானிற்கும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். மெய்யன்பர்கள் அனைவரும் இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டு காத்தல் கடவுளாகிய மஹா விஷ்ணு பெருமானின் பேரருளை பெற்றுய்யுமாறு வேண்டி நிற்கின்றோம்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்

பொ. சி. கிருபாகரக்குருக்கள்
பிரதான குரு.

அறங்காவலர் சபையினர்
மாமூலை ஸ்ரீ மஹா விஷ்ணு ஆலயம்
கணுக்கேணி, முள்ளியவளை.





முதலாம் ஆண்டு
நினைவு அஞ்சலி
தோற்றம்: 1952.02.01
மறைவு: 2011.12.09
அமரர்
சிதம்பரப்பிள்ளை மகேசன்

குடும்பத்தின் குல விளக்காக வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்னெறி காட்டி எம்மை வாழவைத்த
அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
அம்பன், குடத்தனை
(சி-1623)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஒரு புத்திமதி

மன்னர் ஒருவர் தனது அமைச்சரவையை அழைத்துக் கொண்டு ஒருநாள் காட்டுக்குப் புறப்பட்டார்.

அக்காட்டிலே ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் முன்னால் அரசன் போய் நின்று, ''சுவாமி... என்னை ஆசீர்வதியுங்கள். எனக்கு ஏதாவது புத்திமதி சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

முனிவர் அரசனை ஆசீர்வதித்தார். அதன்பின்னர் சொன்னார்; ''மகனே நீ! எந்தக் காரியத்தைச் செய்தாலும், அதைச் செய்வதற்கு முன்னர் ஒரு தடவை அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை நன்றாக யோசித்துப்பார். உன் மனதிற்கு ''அது சரி!'' என்று தெரிந்தால் மட்டும் அதை நீ செய்ய வேண்டும்'' என்றார்.

அரசர், முனிவர் கூறியதை அப்படியே மனதில் இருத்திக் கொண்டார். நூறு பொற்காசுகளை முனிவர் காலடியில் வைத்து விழுந்து வணங்கினார்.

அரசரின் செயலை அமைச்சர் அவதானித்து விட்டு, ''என்ன இது! நமது அரசர் இவ்வளவு ஏமாளியாக இருக்கிறாரே... ஒரு சாதாரண யோசனை கூறிய முனிவருக்கு மன்னர் நூறு பொற்காசுகளை கொடுத்து வணங்குகிறாரே'' என்று நினைத்தார்.

இது அரசருக்குப் புரிந்து விட்டது. இருந்தாலும் அதைப் பற்றி அமைச்சரிடம் அரசர் ஒன்றும் கேட்கவில்லை.

எல்லோரும் அரண்மனைக்குத் திரும்பவும் வந்து சேர்ந்தார்கள்.

அதன்பின் அரசர் என்ன செய்தார் தெரியுமா?

காட்டில் முனிவர் கூறிய புத்திமதியை ஒரு கல்லில் கல்வெட்டாகச் செதுக்கினார். அதைத் தன் அறையிலே எல்லோரது கண்கள் அதில் படும்படி பதித்து வைத்தார்.

இப்போதும் அரசரின் செயலைக் கவனித்த அமைச்சர், ''என்ன இது... நம் மன்னரின் அறியாமையைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே. இதைப்போய் கல்லில் செதுக்கி வைக்க வேண்டுமா?'' என்று நினைத்துக் கொண்டார்.

சில நாட்கள் கடந்தன. ஒருநாள் அந்த மன்னருக்குக் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது.

உடனே அவர் அரண்மனை வைத்தியரை அழைத்தார். வைத்தியர் வந்தார். அவர் மன்னரை சோதித்துப் பார்த்து விட்டு, ''சிறிது நேரம் இப்படியே படுத்திருங்கள்... நான் எங்கள் வீட்டிற்குப்போய் மருந்து எடுத்து வருகிறேன் என்று கூறிவிட்டு விரைந்து சென்றார்.

வைத்தியர் வீட்டிலிருந்து மருந்து எடுத்து வரும் போது மன்னர் ஒரு கட்டிலில் கண்களை மூடித் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது அரண்மனையில் எவரும் இருக்கவில்லை.

வைத்தியர் மன்னரின் அறையினுள் நுழைந்தார். ஒரு சிறிய கோப்பையில் சிறிது மருந்தை ஊற்றினார். சுற்றும் முற்றும் பார்த்தார். ஏதோ ஒரு பொடியை மருந்தில் கலந்தார். கலந்து எடுத்துக் கொண்டு மன்னரை நெருங்கினார். சற்று யோசித்து விட்டுத் திரும்பினார். கையில் இருந்த மருந்தைக் கீழே கொட்டி விட்டு வந்தார். அந்தக் கோப்பையை நன்றாகச் சுத்தம் செய்து விட்டு மறுபடியும் சிறிது மருந்தை ஊற்றி எடுத்துக் கொண்டு வந்து ''மன்னா!'' என்று மெதுவாக அழைத்தார்.

மன்னர் எழுந்து, ''வைத்தியரே! நான் கண்களை மூடிக் கொண்டிருந்தாலும் அவ்வப்போது நீங்கள் செய்ததைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். முதலில் எதையோ கலந்தீர்கள்... பின்னர் அதை கீழே கொட்டிவிட்டு இப்போது வேறு கொண்டு வருகிறீர்கள்... என்ன விடயம்? உண்மையைச் சொல்லுங்கள்'' என்று மிரட்டினார்.

வைத்தியர் அப்படியே மன்னரின் காலில் பொத்தென்று விழுந்தார். உண்மையைச் சொன்னார்.

''மகாராஜா... உங்களுடைய படைத்தளபதி உங்களைக் கொல்ல சதி செய்தார். அவர் என்னிடம் விஷம் கலந்து கொடுக்கச் சொன்னார். அதன் பொருட்டு அவர் எனக்கு நிறைய வெகுமதி தருவதாகக் கூறினார். நானும் சம்மதப்பட்டு இங்கே வந்தேன். அவர் கொடுத்த விஷப்பொடியை மருந்தில் கலந்தேன். அதையெடுத்துக் கொண்டு உங்களிடம் வந்த போது அறையில் கல்வெட்டில் பதித்திருந்த வாசகத்தை வாசித்தேன். அது என்னை யோசிக்க வைத்தது. நான் செய்யும் செயலால் என் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்பதை புரிந்து கொண்டேன். அதனால் அதைக் கொட்டிவிட்டு வேறு மருந்து ஊற்றி வந்துள்ளேன் என்று கூறினார்.

இப்போது அந்த மன்னர் அமைச்சரை அழைத்து ''பார்த்தீர்களா... இந்தப் புத்திமதியை அன்று நீங்கள் அலட்சியமாக நினைத்தீர்கள். இன்றைக்கு அதுதான் என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது'' என்றார் மன்னன். அமைச்சர் தலையைக் குனிந்து கொண்டார்.

அதனால்... பெரியவர்கள் நமக்குச் சொல்லும் புத்திமதி ஆரம்பத்தில் சாதாரணமாகத்தான் தெரியும்; அதற்காக நாம் அதை அலட்சியம் செய்யக்கூடாது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கூடங்குள அணுமின் உடன்படிக்கை விபரத்தை அரசு வெளியிட வேண்டும்

## அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

கூடங்குளம் அணு உலை தொடர்பில் இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் மேற்கொண்டுள்ள உடன்படிக்கையினை பகிரங்கப்படுத்த வேண்டும் என கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அந்த அமைப்பினர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அந்த அமைப்பின் தேசிய இணைப்பாளரும் இலங்கை மாவோவாத கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான அஜித் சுரேந்திரா மேலும் தெரிவித்ததாவது,

தென்னிந்தியாவில் இலங்கைக்கு மிக அருகில் கூடங்குளம் என்னும் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அணு உலையால் இந்திய மக்களுக்கும் இலங்கை மக்களுக்கும் இரு நாட்டு சூழலுக்கும் பெரும் ஆபத்து காத்திருக்கின்றது.

சர்வதேச நாடுகளில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அணு உலை விபத்துக்களினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான பாதிப்புக்களிலிருந்து எமது எதிர்கால பரம்பரையை பாதுகாக்க வேண்டியது தொடர்பில் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஏழை விவசாயிகளினதும் மீனவர்களினதும் நலனுக்கெதிரான செயற்பாடுகள் மனிதாபிமானத்தைக் கொண்டிருப்பதில்லை.

பல மில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தப் போகும் அபாயகரமான மனிதாபிமானமற்ற மிலேச்சதனமான கூடங்குளம் அணு உலைக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

இலங்கை அரசாங்கம் இந்த கூடங்குளம் அணு உலையால்ஏற்படப்போகும் ஆபத்துக்களையும் இந்திய அரசாங்கத்துடன் மேற்கொண்டுள்ள உடன்படிக்கையினையும் மறைத்துள்ளது.

எனவே, இலங்கை அரசாங்கத்திடம் இதனைச் சவாலாக விடுக்கின்றோம். கூடங்குளம் அணு உலை தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் மேற்கொண்டுள்ள உடன்படிக்கையினை பகிரங்கப்படுத்துவதோடு அணு உலையால் இலங்கை மக்களுக்குஏற்படப்போகும் ஆபத்தினையும் மறைக்காமல் வெளிப்படுத்தவேண்டும்.

மேலும் இராணுவக்கெடுபிடிக்குள்வடபகுதியில்உள்ள மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் நாம் அறிவோம். அதுமட்டுமன்றி மக்களின் கருத்துரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. கூடங்குளம் அணு உலையால் வட பகுதி மக்களுக்கே அதிக பாதிப்பு ஏற்படும். எனவே, சகல மக்களும் இன, மத வேறுபாடு இன்றி ஒருங்கிணைந்து நாட்டிற்கு ஏற்படப் போகும் ஆபத்தினைத் தடுக்க முன்வர வேண்டும். கட்சித் தலைவர்களும் வேறுபாடுகளை மறந்து மக்களின் பாதுகாப்பிற்காக ஒன்றிணைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(அ-6)

# ஆவணங்கள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு சம்பியன் லேனைச் சேர்ந்த ஆறுமுகம் மோகனராஜா (653542259V) என்பவரின் தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதி அட்டை, வாகன வருமான உத்தரவுப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 90 | 90 |
| உருளைக்கிழங்கு | 120 | 100-120 | 110 | 110 |
| பச்சைமிளகாய் | 180-200 | 250 | 150 | 250 |
| தக்காளி | 70 | 100 | 80 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 30 | 40 |
| கோவா | 80 | 80 | 70 | 90 |
| கரட் | 100 | 100 | 90 | 140 |
| பூசணி | 65 | 60 | 45 | 60 |
| புடோல் | 50 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 140-150 | 140 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 | 90 |
| பாகற்காய் | 100 | 150 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 50 | 70 |
| பயற்றங்காய் | 140 | 70 | 50 | 100 |
| லீக்ஸ் | 90 | 90 | 60 | 120 |
| பீற்றூட் | 40 | 160 | 40 | 140 |
| கறிமிளகாய் | -- | 200 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 200 | 80 | -- |
| போஞ்சி | -- | 200 | 70 | 200 |
| கத்தரிதம்புள்ள | 90 | 70 | 60 | 80 |
| கீரை 1 பிடி | 12-15 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 150 | 180 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 35 | 30-35 |

# இராசி பலன்

27.11.2012
(கார்த்திகை 12, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு
சதுர்த்தசி மாலை 6.22 மணிவரை
பரணி பிற்பகல் 12.58 மணிவரை
இராகுகாலம் 3.13-4.43 மணிவரை
சுபநேரம் 10.43-12.13 மணிவரை
திருவெண்ணாமலை தீர்த்தம்,
திருக்கார்த்திகை, குமாராலய தீபம்.

**மேடம்** வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு, சயன சுகமுண்டு.

**இடபம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்** சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள், புதிய நட்புகள் அறிமுகமாகும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் உயர்வடையும் வாய்ப்புண்டு.

**கடகம்** தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவ முன்வருவர், சுப செய்திகள் வந்து சேரும் நாள், திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் சரியாக நடைபெறும், போசன நன்மையுண்டு.

**சிங்கம்** மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளித்து வெற்றி காண்பீர்கள், உறவினர் பகை மாறும், உடல் உழைப்பில் ஆர்வம் கூடும், எதிர்பாராத வகையில் சில பயணங்கள் ஏற்பட்டு ஆதாயம் கிடைக்கும்.

**கன்னி** உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, போசன சுகமுண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் சற்று தாமதங்கள் ஏற்படலாம், திருடர் பயமுண்டு, ஆரோக்கியக் குறைவான நாள்.

**துலாம்** உறவினர் வருகையால் கலகலப்பு ஏற்படலாம், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், உடல் நலம் சீராகும், சுவாரஸ்யமான நாள், பொருளாதார நிலை உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**தனுசு** பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள புதிய வழி பிறக்கும், அரசியல் ஈடுபாடுண்டு, வியாபார விருத்தியுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், கல்வியில் ஆர்வமுண்டு, சஞ்சலங்கள் ஏற்பட்டு அமைதி குறையலாம், பயணங்களால் பலனுண்டு, பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கும்பம்** சுதந்திரமாகச் செயற்படும் நாள், சமுதாயப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, குடும்பத்தினர் உங்களின் ஆலோசனையைக் கேட்டு நடக்க முன்வருவர், அந்நியர் சந்திப்புண்டு.

**மீனம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் மேற்கு மக்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம்

## 300 குடும்பங்கள் பதிவு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாதகல் மேற்கில் மீள்குடியேற்றப்பட்ட 300 குடும்பங்கள் இந்திய வீட்டுத்திட்டத்திற்கு பதிவினை மேற்கொண்டுள்ளனர் என பிரதேச செயலர் முரளிதரன் தெரிவித்தார்.


மாதகல் மேற்குப் பகுதியில் 21 வருடங்களின் பின்பு கடந்த மாதம் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் குறித்த மக்களுக்கான வாழ்விடங்களை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான உணவுப் பொதிகள், தற்காலிக குடிசைகள் அமைப்பதற்கான உதவிகள் மற்றும் காடுகளை அகற்றுவதற்கான உபகரண உதவிகள் என்பன பிரதேச செயலாளர் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

தமது காணிகளைத் துப்புரவு செய்து குடியேறுவதற்கு தயாராகி வரும் மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் நிரந்தர வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக இதுவரை 300 குடும்பங்கள் பதிவினை மேற்கொண்டுள்ளதாகவும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

மேலும் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை மேற்குப் பகுதியில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதியிலுள்ள மண்ணணைகள் அகற்றப்பட்டு வருவதாகவும் இதன் தொடர்ச்சியாக சண்டிலிப்பாய் மேற்கு பகுதியிலுள்ள மண்ணணைகளும் அகற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் அமைக்கப்பட்ட மண்ணணைகள் மக்களின் விரைவான மீள்குடியேற்றத்திற்கு பெரும் தடையாகவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-6)



நன்றி: ஐலன்ட்

# தமிழக மற்றும் தென்பகுதி மீனவர்கள் யாழ்.குடா கடற்பரப்பில் அத்துமீறல்

## தடுக்க முடியாத கையறு நிலையில் இருக்கிறோம்— எமிலியாம்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

தென்பகுதி மீனவர்களின் அத்துமீறல் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் யாழ்.குடா முழுவதும் இடம்பெறுவதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் சங்க சமாசத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

இவ்விரு பகுதியினருக்கும் இடையில் எமது மீனவர்கள் மாட்டிக்கொண்டு சிக்கித் தவிப்பதாக அவர் கூறினார். இந்திய மற்றும் தென்பகுதி மீனவர்களின் வடபகுதி கடற்பரப்பில் இடம்பெறுகின்ற அத்துமீறல் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் யாழ்.குடா முழுவதிலுமுள்ள கடற்பிரதேசங்களில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இவர்கள் எமது கடற்பரப்புக்குள் பெருமளவில் அத்துமீறி உள்நுழைந்து இழுவைப் படகுகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இவர்களின் அத்துமீறல்களினால் நாம் இங்கு நிர்வாகம் நடத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இது தொடர்பில் அரசிடமும் இங்குள்ள அமைச்சரிடமும் எடுத்துக் கூறியிருந்தோம். பயன் எதுவும் கிடைக்கவில்லை.

இறுதியாக கடந்த மாதத்தில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாம் இப்பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுத் தருவதாக கூறியதோடு இந்தியாவிற்கு சென்று இது தொடர்பில் கதைப்பதாகவும் கூறியிருந்தனர்.

எனினும் தற்போது ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் இப்பிரச்சினை தொடர்பில் முன்னேற்றகரமான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இவ்வாறு அனைத்து தரப்பினரும் எமது மீனவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பின்னடிப்புச் செய்கின்றனர்.

சந்திப்புக்களிலும் கூட்டங்களிலும் வாக்குறுதிகளினை அள்ளி வீசி விட்டு பின்னர் அவை தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாதவை போல் மௌனித்து இருந்து விடுகின்றனர். இந்திய மீனவர்களின் அத்துமீறலினையடுத்து தென்பகுதி மீனவர்களின் அத்து மீறலும் குடாக்கடலில் இடம்பெறுவதாக மீனவர்களால் முறையிடப்பட்டுள்ளது.

இத் தென்பகுதி மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் நாம் நடவடிக்கை எடுக்க முடியாதவர்களாக உள்ளோம். கடற்படையினரின் அனுமதியுடன் வடபகுதிக் கடற்பரப்பில் நுழையும் இவர்கள் கடற்படையின் கட்டுப்பாட்டிலுள்ள கடற்பிரதேசங்களில் அவர்களின் பாதுகாப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் தொழில் நடவடிக்கைக்கு இங்குள்ள சங்கங்களின் அனுமதி தேவையென்ற போதிலும் அதனை வழங்குவதற்கு இங்குள்ள சங்கங்கள் மறுப்புத் தெரிவித்திருந்தன. எனினும் இம் மீனவர்கள் இங்கு தொழில் செய்வதற்கு அனுமதி வழங்குமாறு கடற்படையினர் சங்கங்களினை வலியுறுத்தி வந்த போதிலும் அதற்கு உடன்படாத சங்கங்கள் அதனை நிராகரித்திருந்தன.

இந்நிலையிலேயே கடற்படையினரின் அனுமதியுடன் தென்பகுதி மீனவர்கள் எமது கடற்பரப்பில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இவ் இரு பகுதியினரின் அத்துமீறல்கள் நிறுத்தப்பட்டு எமது மீனவர்களின் தொழில் நடவடிக்கையை மேம்படுத்துவதற்கு இங்குள்ளவர்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# சா/த மாணவர்களுக்கு கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தமிழ்ச் சங்கத்தினால் க.பொ.த. (சாதாரண) தர மாணவர்களுக்கு தமிழ்ப்பாட வழிகாட்டல் கருத்தரங்கு நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தேசிய பாடசாலைகளின் முன்னணி வளவாளர்களால் நடத்தப்படும் இக் கருத்தரங்கில் எதிர்பார்க்கை வினா, விடைகள் வழங்கப்படும். கையேட்டிற்கு மட்டும் கட்டணம் அறவிடப்படும். வேறு பாடசாலை மாணவர்களும் சீருடையுடன் சமுகம் தர வேண்டும் என யாழ்.மத்திய கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (அ)




# சுண்டிக்குளம் பகுதியில் மீன்பிடிக்க தடை விதிப்பு

## சிங்கள மீனவர்களுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் கடற்றொழிலை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு படைப்பிரிவினர் தடையாகவுள்ளதோடு மக்கள் மீள்குடியேறுவதையும் தடுத்து வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் அதிகளவில் நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு படையினர் கூறுகின்ற போதும் அப்பகுதியில் தென் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடலட்டை பிடித்து வருகின்றனர்.

அத்தோடு நிலக்கண்ணி வெடியுள்ளதாக கூறப்படும் பகுதிக்கும் செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர் என அப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ-6)

# சாவகச்சேரி இந்துவின் பெண்கள் அணி வெற்றி

தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி பிரிவின் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சிவகோச்சாரியார் ஞாபகார்த்த காற்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் 14 வயது ஆண், பெண் பிரிவினருக்கிடையிலான போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு எதிராக கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. அணி களமிறங்கியது. களமிறங்கிய ஆண், பெண் இரு அணிகளும் நீண்ட நேரமாக கோல் எதுவும் போடாமையால் வெற்றியை தீர்மானிப்பதற்கான தண்ட உதை வழங்கப்பட்டது.

இதில்சாவகச்சேரி இந்துக்கல்லூரியின்பெண்கள் அணி 3:2 என்ற கோல் கணக்கிலும் ஆண்கள் அணி 2:1 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் இரு அணிகளும் வெற்றியை தமதாக்கிக் கொண்டன. (அ-3-29)

# சிறுவர், முதியோர் தின நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றம் யாழ். வை.எம்.சி.ஏ நிறுவனஅனுசரணையுடன் நடத்தும் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 9மணிக்கு அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நகராட்சிமன்ற தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தலை மையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்கள பிரதம விலை மதிப்பீட்டாளர் எஸ்.ஜெகநாதன், கொமர்ஷல் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் த.பிறாஜீவ், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஓய்வு பெற்ற உதவிப்பணிப்பாளர் டபிள்யூ.விமலராஜன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக நகராட்சி மன்ற உப தவிசாளர் கு.சதாசிவமூர்த்தி மற்றும் நகராட்சி மன்ற உறுப்பினர்களான க. மயில்வாகனம், ப.ஸ்ரீதரன், பொ.செல்வரட்ணம், த.சுதர்சன், ந.திருக்குமரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-29)

## வேலணை பிரதேச செயலர் பிரிவில்

# காணிப் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை

வேலணை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் காணி அற்ற குடும்பங்கள், அரச காணிகளில் வசித்து எதுவித ஆவணமும் பெற்றுக் கொள்ளாதவர்கள், அரச காணிகளில் வசித்து ஆவண மாற்றம் செய்யாதவர்கள் ஆகியோருக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் அறிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் தத்தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். இவ்வாறான பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கல்வித்துறை மேம்பாடு குறித்து விசேட கலந்துரையாடல்

## பந்துல , டக்ளஸ் சந்திப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தின் கல்வித்துறை மேம்பாடு தொடர்பாக மேற்கொண்டு வருகின்ற பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் குறித்தும் சில பிரச்சினைகள் தொடர்பாகவும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சர் பந்து குணவர்த்தனவை கல்வி அமைச்சில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்படி தற்போது நாடளாவிய ரீதியில் மஹிந்த சிந்தனைக்கு அமைவாக ஆயிரம் பாடசாலைகள் மஹிந்தோதய திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் வடக்கு மாகாணத்திற்கென 110 பாடசாலைகள் அமையவிருக்கும் நிலையில், அப்பாடசாலைகளுக்குரிய விஞ்ஞான, கணித, ஆங்கில மற்றும் கனணி தொழில்நுட்ப ஆசிரியர்களது நியமனங்கள் தொடர்பாக குறைந்த எண்ணிக்கையே உள்வாங்கப்பட்டிருப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய குறிப்பிட்ட ஆசிரியர்களை அரச சேவைக்கென தற்போது உள்வாங்கப்பட்டிருக்கும் பட்டதாரி பயிலுநர்களிலிருந்து இணைந்த அமைச்சரவை பத்திரத்தின் மூலம் தெரிவு செய்து கொள்வதாக இணக்கம் காணப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சி டிப்ளோமா முடித்த பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களை வழங்குவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கையை விரைவில் மேற்கொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

இச்சந்திப்பில் விசேடமாக வன்னி மற்றும் வடமராட்சி கிழக்கு தொண்டர் ஆசிரியர்களது நியமனங்கள் குறித்து ஆரோயப்பட்டது.

இதற்கென அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவிற்கு உரிய ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் வெகு விரைவில் இப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் தற்போது தேசிய பாடசாலைகளில் இருக்கின்ற மேலதிக ஆசிரியர்களை ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற மாகாண மட்ட பாடசாலைகளுக்கு பரிமாற்றம் செய்தல், அதேபோல் மாகாண மட்ட பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு மாற்றம் செய்தல் போன்ற செயற்றிட்டத்தின் மூலம் வட பகுதியில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையை அனைத்துப் பாடசாலைகளிலும் இயன்றளவு நீக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இதற்கென கல்வி அமைச்சு ஆளுநருக்கு எழுத்து மூல அதிகாரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வட மாகாணத்தில் நிலவுகின்ற பாடசாலை அதிபர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் முகமாக இலங்கை கல்வி நிர்வாகச் சேவை மற்றும் இலங்கை அதிபர் சேவைக்கான பிரத்தியேக பரீட்சை ஒன்றை நடத்தி அதன் மூலம் மேற்படி வெற்றிடங்களை எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன் நிரப்புவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. (அ-2)


YARL Properties

(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)
யாழ் குடாநாட்டின்
எப்பகுதியில் இருந்தும்
அழைக்க வேண்டிய ஒரே
தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

யாழ். மாவட்டத்தில் எப்பிரதேசமாயினும் காணிகளை விற்கவோ வாங்கவோ எம்முடன் கீழ்க் கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com


## ஒரே நேர அட்டவணையின் கீழ் பேருந்து சேவைகள்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகள் அனைத்தும் ஒரே நேர அட்டவணையின் கீழ் இயக்கப்படும் என தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சீ.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இவ்வாறு இயங்கவுள்ளதாக அமைச்சர் நேற்றைய தினம் பாராளுமன்றில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சந்தை ஆரம்பிப்பதற்கு தடை; வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டு இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட இருந்த சந்தைச் செயற்பாடுகள் கிளிநொச்சி நீதிமன்ற தடை உத்தரவினால் தடைப்பட்டதைக் கண்டித்து நேற்று சந்தை வர்த்தக சங்கத்தலைவர் இரத்தினமணி தலைமையில் கண்டன ஊர்வலம் ஒன்று சந்தையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த சந்தையானது கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் திறந்து வைக்கப்பட்டு செயற்பாடுகள் எதுவும் இடம்பெறாதிருந்தது.

இந்நிலையில் இன்றைய தினம் சந்தைச் செயற்பாடுகள் ஆரம்பிக்க இருந்த போது 10 வர்த்தகர்கள் தாம் கடந்த 70,80 ஆம் ஆண்டில் இருந்து வியாபாரம் செய்வதாகவும் சந்தையில் தமக்கு சிறப்பிடம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்து கிளிநொச்சி நீதிமன்றத்தில் பிரதேச சபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர். இதனால் நீதிமன்றம் சந்தைச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தடை உத்தரவு பிறப்பித்தது.

சந்தைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமையினாலேயே ஏனைய வர்த்தகர்கள் கண்டன ஊர்வலத்தை நடத்தினர்.

இக்கண்டன ஊர்வலத்தில் 10 பேரின் வாழ்க்கை 320 வர்த்தகர்களின் வாழ்வாதாரமா?, 10 பேருக்கு சிறப்பு அனுமதி எங்கள் சந்தை வர்த்தகர்களுக்கு பாதிப்பா?, வைக்காதே வைக்காதே நீதிமன்றத் தடை வைக்காதே! போன்ற சொற்றொடர்கள் அடங்கிய சுலோக அட்டைகளை தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் கிளிநொச்சி அரச அதிபர் பணிமனை, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரின் அலுவலகங்களுக்கு சென்று மகஜரையும் கையளித்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் 200 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-3-254)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்: கார்த்திகை 3
உயரம்: 5' 8"
கி.பா: 78 3/4,
தொழில்/ தகைமை : A/L, சாரதி
கனடா P.R
தொ. இல : B -315

பிறப்பு: 1986 இந்து வேளாளர்
நட்சத்திரம்: பூசம் 1
உயரம்: 5' 2"
கி.பா: 32 1/2
தொழில்/ தகைமை: BSc Study
(விஞ்ஞான ஆசிரியை)
தொ. இல : G - 717

பிறப்பு: 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்: பூரம் 3
உயரம்: 5' 9"
கி.பா : 77, 8 இல் செவ்.
தொழில்/ தகைமை : Studing U.K
(Student Visa)
தொ. இல : B - 316

பிறப்பு: 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்: உத்தராடம் 2
உயரம்: 5' 2"
கி.பா: 108, 7இல் செவ்.
தொழில்/ தகைமை: A/L,
தொ. இல : G - 512

பிறப்பு: 1971 இந்து வேளாளர்
நட்சத்திரம்: ரோகினி 1
உயரம்: 5' 5"
கி.பா: 15 1/4
தொழில்/ BSc, MSc, M.phil
(விவாகரத்து பெற்றவர்)
தொ. இல : B - 317

பிறப்பு: 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்: அச்சுவினி 1
உயரம்: 5'
கி.பா: 70
தொழில்/ தகைமை: A/L,
சுருக்கெழுத்தாளர்
தொ. இல : G - 513

பிறப்பு: 1976 இந்து வேளாளர்
நட்சத்திரம்: மூலம் 3
உயரம்: 5' 6", 8 இல் செவ்.
கி.பா: 32
தொழில்/ தகைமை: BCT
தொழில்நுட்ப கல்லூரி, கட்டிட ஒப்பந்தகாரர்.
தொ. இல : B - 318

பிறப்பு: 1961 இந்து வேளாளர்
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5'
கி.பா: 29 1/4
தொழில்/ தகைமை: A/L,
பயிற்றப்பட்ட ஆசிரியை
எ.பா: சைவபோசனம்
தொ. இல : G - 516

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


# இலஞ்சம் கொடுக்க முயன்ற இலங்கை தம்பதியினர் கைது

டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரி ஒருவருக்கு இலஞ்சம் கொடுக்க முயன்ற இலங்கை தம்பதியினரை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டிருந்த தங்களை அந்த நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கக் கோரியே இந்த தம்பதியினர் குடிவரவு அதிகாரிக்கு 10 ஆயிரம் டினார் இலஞ்சமாக கொடுக்க முற்பட்டதாக கூறப்படுகின்றது.

குறித்த பெண் 1996 ஆம் ஆண்டு டுபாய்க்கு பணிப் பெண் விசாவில் வந்ததாகவும் பின்னர் தனது வேலைபெற்றோரிடமிருந்து தப் பியோடியதாகவும் அவர் ஒத்துக்கொண்டார்.

இந்த நிலையில் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி யமை, அறிவித்தலின்றி வேலையை விட்டு தப்பியோடியமை ஆகிய குற்றங்களுக்காக 2 மாத சிறை அனுபவித்த பின்னர் அவர் 2000 ஆம் ஆண்டு நாடு கடத்தப்பட்டார்.

சிலகாலம் இலங்கையில் தங்கியிருந்த அவர் தனது கணவரின் அனுசரணையுடன் போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி 2008 ஆம் ஆண்டு மீண்டும் டுபாய்க்கு சென்றிருந்த வேளையிலேயே அவரை கைது செய்த அந்த நாட்டுப் பொலிஸார் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அவருக்கு தடை விதித்ததாக தெரிய வருகின்றது. (அ-2)

## போதைப்பொருள் வைத்திருந்த நபர் கைது

(கொழும்பு)


ஹற்றன் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் போதைப் பொருள் வைத்திருந்த நபர் ஒருவர் மஸ்கெலியா விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபரிடம் இருந்து போதைப் பொருள் உருண்டைகள் 10 பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரைக் கொடுத்தேனும் ஈழத்துக்காக போராடுவோம்

## நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் உரை



(கொழும்பு)

உயிரைக் கொடுத்தேனும் ஈழ விடுதலைக்காக தொடர்ந்து போராடுவோம் என நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையில் நம் மண்ணைக்காக்க, நம்மினத்தின் மானத்தை காக்க தமிழீழத் தேசத்தின் தன்னாட்சியை படைக்க உருவானதே தமிழீழ விடுதலைக்கான ஆயுத வழிப் போராட்டமாகும்.

நம்மீது இன அழிப்புப் போரை நடத்திய இலங்கை அரசை எதிர்த்து நம் இனத்தின் விடுதலைக்காக நடத்திய ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு பின் மௌனிக்கப்பட்டது.

விடுதலைக் களத்தில் ஏற்பட்ட அந்த பின்னடைவைப் பயன்படுத்திக் கொண்டு முடிந்தது தமிழீழ விடுதலைப் போராட்டம் என்று இலங்கை அரசு தன்னை இனத்தின் தலைவர்கள் என்றும் கூச்சமின்றி பேசிய நிலையில்தான் நாம் தமிழர் கட்சி பிறந்தது.

துரோகிகளின் துணையுடன் இனப் பகைவர்கள் புனைந்த அரசியல் சதியை தொடர்ந்து முறியடித்து தமிழினத்தின் விடுதலை வேட்கையை அணையாமல் காத்து வருகிறது.

தமிழனத்தின் விடுதலைக்கு இன்னுயிரைத் தந்தாகினும் இனத்தின் விடுதலையை வென்றெடுப்போம் என்று உறுதியேற்க வேண்டும். இந்த உறுதியை தமிழனாய் பிறந்த ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக எடுக்கவேண்டும். தமிழ்தேசத்தின் மீது தொடுத்த போரில் ஒன்றே முக்கால் இலட்சம் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதனை இன அழிப்பு என்று இதுவரை எந்த ஒரு நாடும் கூறவில்லை. நாம் தமிழர் கட்சியைப் பொறுத்தவரை அங்கு நடந்தது போர்க்குற்றமல்ல. அந்தப் போரே குற்றம் என்று கூறி வருகிறது. நம் தலைவரால் பன்னாட்டு அரசியலிற்காக நியமிக்கப்பட்டு அரும் பணியாற்றி வந்த மதீந்திரன் பிரான்சில் சுட்டுக் கொல்லப்பட்டது கொடூர நிகழ்வாகும்.

தமிழினத்தின் ஆயுத போராட்டத்தை முடக்கிவிட்டால் எல்லாம் முடிந்துவிடும் என்று நினைத்த இலங்கையரசு அது சர்வதேச அளவில் கொழுந்து விட்டு எரிவதை சகிக்க முடியாமல் மேற்கொண்ட நடவடிக்கைதான் பரிதியின் கொலையாகும்.

எனவே நமது இனத்தின் விடுதலையை முறியடிக்க எதையும் செய்த நம் எதிரிகள் முனைப்பாக செயலாற்றி வரும் நிலையில் அதனை முறியடித்து விடுதலையை வென்றெடுக்க இனத்தின் ஒற்றுமை ஒன்றே ஒரே வழியும் வலிமையுமாகும். இலக்கை நோக்கிய ஒன்றிணைந்த செயற்பாடே அந்த ஒற்றுமையை உண்டாக்கும். ஒன்றுபடுவோம் இனத்தின் விடுதலையை வென்றெடுப்போம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## புலிகளுக்கு ஆதரவாக சுவரொட்டிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை பாதுகாப்புப் படையினர் அகற்றியுள்ளனர். திருகோணமலை, உப்புவெளி ஆகிய இரு இடங்களில் இனந்தெரியாதோரால் ஒட்டப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சுவரொட்டிகளையே பாதுகாப்புப் படையினர் நேற்றைய தினம் காலை அகற்றியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மாவீரர் தினம் இன்றைய தினம் நினைவு கூரப்படுவதை முன்னிட்டே இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## மாநகரசபையின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக மாநகரசபை செயலாளர் தா.தர்மரட்ணம் அறிவித்துள்ளார். (அ)

## ஐ.தே.கட்சி மாநாட்டில் 5,800 பிரதிநிதிகள்

ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டில் 5 ஆயிரத்து 800,பிரதிநிதிகள் மட்டுமே பங்கு கொள்வரென கட்சிப் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி சிறிகொத்தவில் இம்மாநாடு நடைபெறும். இதற்கான அழைப்பிதழ் பிரதிநிதிகளுக்கு தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு முன்னர் பிரதிநிதிகள் ஆசனங்களில் அமர வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

கட்சித் தலைமைத்துவத்தை ஆறு வருடங்களுக்கு மாற்றாமல் தொடர்ந்து கொண்டு செல்லல், கட்சியின் கொள்கை தொடர்பான பிரேரணைகளும் மாநாட்டில் நிறைவேற்றப்படுமென செயலாளர் தெரிவித்தார். (அ-2)

## தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ள திட்டம்

திவிநெகும செயற்றிட்டத்தின் கீழ் 60 இலட்சம் தென்னங்கன்றுகளை பயிரிடுவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

திவிநெகும செயற்றிட்டதின் கீழ் 97 ஆயிரத்து 750 ஏக்கர் நிலப்பரப்பில் தெங்கு பயிர் செய்கையை மேற்கொள்வதற்கு முடிந்ததாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இத்திட்டத்தின் மூலம் 25 இலட்சம் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி தேவையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியதாக வேலைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## தமிழ் யுவதிகள் சட்டவிரோதமாக இராணுவத்தில் இணைக்கப்படுகின்றனர்

### எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் பெண் போராளிகள் இராணுவத்தில் சட்ட விரோதமாக இணைக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சேர்ப்பு மோசமான கவலையளிக்கும் ஒரு விவகாரம் எனவும் இது தொடர்பான உரிய வர்த்தமானி அறிவித்தல் ஏதும் முறைப்படி வெளியிடப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆட்சேர்ப்பு சட்டவிரோதமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு இராணுவத்தளபதி வீடு வீடாகச் சென்று கட்டாயப்படுத்தி பெண்களை இராணுவத்தில் சேர்த்துள்ளார்.

இந்த பெண்களுக்கு எந்தவொரு இராணுவப் பயிற்சியும் அளிக்கப்படாது என்று அவர் கூறியுள்ளார்.

ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பெண்கள் ஏன் அழுகிறார்கள் என்று பெண் இராணுவத்தினரிடம் அல்ஜெசீரா கேள்வி எழுப்பியதற்கு குடும்பத்தினரை விட்டு பிரியும் உணர்ச்சியால் அழுவதாக அவர்கள் கூறியுள்ளனர். அதேவேளை பெண்கள் மட்டுமே ஏன் தெரிவு செய்யப்பட்டனர்? என்று கேள்வி எழுப்பியுள்ள நவசமசமாஜக் கட்சியின் விக்கிரமபாகு கருணாரத்ன இது மிகவும் மோசமான விவகாரம் என்றும் தெரிவித்துள்ளார். (அ-2)

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்ற வழி செய்யுங்கள்

### ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

13 ஆவது அரசியலமைப்பு இலங்கைக்கு திணிக்கப்பட்ட ஒன்று. எனவே அதனை தொடர்ந்து வைத்திருக்காமல் மாற்று வழிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.


மாகாணசபை முறையானது இந்தியாவினால் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனவுடன் தீவிரமாக கலந்தாலோசிக்காமல் கொண்டு வரப்பட்ட முறையாகும்.

அதனை விடுதலைப்புலிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் அதனை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அமைதி காக்கும் படையும் இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில் மாகாணசபை உறுப்பினர்களுக்கு மாத்திரமே நன்மை பயக்கும் இந்த மாகாணசபை திட்டத்தை ஒழிக்க வேண்டும்.

அதற்கு கிராம சபை அல்லது கிராம இராச்சியம் என்ற முறையை அறிமுகப்படுத்தலாம்.

இதன்மூலம் சமூகங்கள் நாட்டுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி தாமே தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)





சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களையும் காக்கும் 'யோகா'

தற்போது கணனி பயன்பாடு, அதிக நேரம் டி.வி. பார்ப்பது போன்றன அதிகரித்துள்ளமையால் பார்வைக்குறைபாட்டால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

குடும்ப பாரம்பரியத்தன்மை, உறவு முறை திருமணம், ஊட்டச் சத்து குறைபாடு, தொடர்ந்து கணனியில் வேலை செய்தல், கண்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாமல் இருத்தல், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்த நோய் உள்ளிட்ட காரணங்களால் கண்ணில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

### பார்வைக்குறைபாடு

இதில் விழி லென்ஸுடன் நெருங்கிய தொடர்புடைய கிட்டப் பார்வை, தூரப் பார்வை குறைபாட்டை ஆரம்ப நிலையிலேயே கண் மருத்துவர் மூலம் தெரிந்து கொள்வது அவசியம். இவ்வாறு ஆரம்ப நிலையிலேயே கிட்டப் பார்வை- தூரப் பார்வை குறைபாட்டை கண்டுபிடித்து, பயிற்சிகள் அளிப்பதன் மூலம் அதன் தீவிரத் தன்மையை பெருமளவு கட்டுப்படுத்த முடியும்.

முன்பெல்லாம் கிட்டப் பார்வை குறைபாடு காரணமாக (அருகில் உள்ள பொருட்கள் நன்றாகத் தெரியும். தொலைவில் உள்ள எழுத்துக்களைப் படிப்பதில் கஷ்டம் ஏற்படும்.) பெரியவர்களே அதிக அளவில் பாதிக்கப்பட்டனர். ஆனால், இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறை காரணமாக கிட்டப்பார்வை குறைபாட்டால் குழந்தைகளும் அதிக அளவில் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

### கண்ணாடியைத் தவிர்க்க யோகா பயிற்சி

இவ்வாறு கிட்டப்பார்வை அல்லது தூரப் பார்வை காரணமாக குழந்தைகள் பாதிக்கப்படும் நிலையில் அவர்களுடைய கண்களுக்கு முறையான யோகா பயிற்சி அளித்து பார்வைத் திறனை மேம்படுத்த முடியும். சில நேரங்களில் பார்வைக் குறைபாட்டைச் சரி செய்வதற்கான கண்ணாடி அணிவதையும் கூட அவர்கள் தவிர்க்க முடியும்.

### பார்வைக் குறைபாடு அறிகுறிகள்

தலைவலி, கண்ணில் நீர் கொட்டுதல், கண் எரிச்சல், மங்கிய பார்வை, கண்ணைச் சுருக்கி எழுத்துக்களை படித்தல், தொலைக் காட்சியை மிக அருகில் சென்று பார்த்தல், வகுப்பறை கரும்பலகையிலிருந்து வீட்டுப் பாட செயற்றிட்டத்தை தவறாக எழுதிக் கொண்டு வருதல், கழுத்தை சாய்த்துக் கொண்டு ஒரு புறமாக பார்த்தல் போன்ற பொதுவான அறிகுறிகள் குழந்தையிடம் வெளிப்படும் நிலையில் பெற்றோர் அலட்சியமாக இருக்கக்கூடாது.

இத்தகைய அறிகுறிகள் தெரிந்த உடனேயே ஏனைய வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு குழந்தையை கண் வைத்தியரிடம் அழைத்துச் செல்வது அவசியம். ஏனெனில் தொடர் பார்வைக் குறைபாடு காரணமாக கண்ணாடி போடுவது உட்பட பெரிய சிகிச்சைகளைச் செய்ய வேண்டிய நிலைகூட ஏற்படலாம்.

இதேபோன்று பார்வைத் திறனுக்கு முக்கிய உறுப்பாக விளங்கும் கரு விழியின் (விழி லென்ஸ்) நிறம் கறுப்பாகவோ அல்லது பிறவுண் நிறமாக இருந்தால் இயல்பானது; மாறாக கரு விழியின் நிறம் வெள்ளையாக இருந்தால் பார்வைக்குறைபாடு உள்ளதாக கொள்ள வேண்டும். குழந்தையை உடனடியாக கண் மருத்துவரிடம் காண்பிப்பது அவசியம்.

தலைவலி, கண்ணில் நீர் வடிதல் உட்பட மேற்சொன்ன அறிகுறிகள் தெரிய வரும் நிலையில் உடனடியாக குழந்தையை கண் வைத்தியரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். குழந்தைக்கு முழுமையான கண் மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டு பார்வைக் குறைபாடு ஆரம்ப நிலையில் இருந்தால் அதற்கு உரிய சிகிச்சையை கண் மருத்துவர் பரிந்துரைப்பார்.

### தொடர் தலைவலியா?

குழந்தையை ஒரு குறிப்பிட்ட தொலைவில் (6 மீற்றர் தொலைவு) படிக்க வைத்து பார்வைக் குறைபாட்டைத் தீர்மானிக்கும் மேலிருந்து கீழாக பெரிய- சிறிய அளவில் எழுத்துக்கள் அடங்கிய ஸ்னெல்லன் சார்ட் (அட்டவணை) பயன்படுத்தப்படும். இதன்மூலம் பார்வைத்திறன் மதிப்பிடப்படும்.

தொடர் தலைவலி உட்பட அறிகுறிகளுக்கு ஏற்ப உள்ள பார்வைக்குறைபாடு மேற்சொன்ன எழுத்து அட்டவணையில் வெளிப்பட்டு விடும். உதாரணமாக குழந்தைக்கு கிட்டப் பார்வை குறைபாடு அல்லது தூரப் பார்வை குறைபாடு அளவு மிகக் குறைவாக உள்ளதாகக் கொள்வோம்.

குறிப்பாக கிட்டப் பார்வை குறைபாடு மைனஸ் 0.25 என்று இருந்தால் உடனடியாக கண்ணாடி இல்லாமல் பயிற்சிகள் மூலம் குறையை நிவர்த்தி செய்து கொள்ள முடியும். பார்வைக் குறைபாடு அதிக அளவில் இருந்து கண்ணாடி பரிந்துரைத்தாலும் கூட குறைபாடு மேலும் மோசமாகாமல் இருக்க கண்ணுக்கு அளிக்கப்படும் யோக பயிற்சிகள் உதவும்.

### யோக பயிற்சி உதவுவது எப்படி?

பார்வைக்குறைபாடு குறித்து கண் மருத்துவர் கண்டுபிடித்தவுடன் யோகா பயிற்சி நிபுணரிடம் அனுப்புவார். இதையடுத்து நோயாளியின் பார்வைக் குறைபாடு மதிப்பீட்டை யோகா கண் பயிற்சி நிபுணர் முழுமையாக ஆய்வு செய்வார்.

### 8 வகை பயிற்சிகள்

இதையடுத்து வீட்டிலேயே தினமும் நோயாளி செய்யக்கூடிய முறையான பயிற்சிகளை யோகா பயிற்சி நிபுணர்கள் சொல்லித் தருவர். பார்வைக் குறைபாடு உள்ளோருக்கு 8 வகையான பயிற்சிகள் சொல்லித் தரப்படும்.

குழந்தைகளுக்கு பயிற்சியை சொல்லித் தரும் நிலையில் அவர்களுக்கு வீட்டில் தொடர்ந்து உதவ பெற்றோரும் உடன் இருப்பது அவசியம்.




சூரிய உதயம்- சூரிய அஸ்தமன கண் பயிற்சி, உள்ளங்கை மூலம் மூச்சைக் கட்டுபடுத்தி கண்களுக்கு ஓய்வு கொடுக்கும் பயிற்சி, பந்து மூலம் கண் பயிற்சி, வரைபடத்தைப் பார்த்து கண்களுக்கு சுழல் பயிற்சி அளித்தல், வெள்ளரிக்காய் அல்லது பஞ்சை குளிர்ந்த நீரில் நனைத்து பயிற்சி அளித்தல் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்படும்.

இந்தப் பயிற்சிகளை தொடர்ந்து கற்றுக் கொள்ள 5 நாட்கள் மருத்துவமனைக்கு வர வேண்டும். அதாவது ஒவ்வொரு நாளும் சுமார் 20 நிமிடம் மட்டுமே இந்தப் பயிற்சிகளைக் கற்றுக் கொள்ள போதுமானது. நேரம் இல்லை என்று சொல்வோருக்கு அனைத்துப் பயிற்சிகளும் ஒரு மணி நேரத்திலேயே கற்றுத் தரப்படும்.

இந்தப் பயிற்சிகளைப் பொறுத்தவரை பெற்றோரோ அல்லது குழந்தையோ கற்றுக் கொள்வது மிகவும் எளிதானது. ஆனால், தொடர்ந்து இந்தப் பயிற்சிகளை வீட்டில் செய்வதைத்தான் மன உறுதியாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு மூன்று அல்லது ஆறு மாதங்கள் தொடர்ந்து பயிற்சியைச் செய்து விட்டு கண் மருத்துவரைச் சந்திக்கும் நிலையில் பார்வைத் திறனில் நல்ல முன்னேற்றம் இருக்கும். பார்வைக் குறைபாட்டின் அளவும் குறைந்திருக்கும்.

### பயிற்சியின் சாதக அம்சங்கள் என்ன?

கண் தசைகள் வலுப்படுதல், இரத்த ஓட்டம் அதிகரித்தல், கண்களுக்கு ஓய்வு, கண் அசைவு- சுழற்சித் தன்மை மேம்படுதல், கண் உறுத்தல்- கண் உலர்ந்து போதல் தவிர்க்கப்படுதல், கவனிப்புத் திறன் அதிகரித்தல், பார்வை தெளிவடைந்து செயற்றிறன் அதிகரித்தல் ஆகியவை சிறப்பு அம்சங்களாகும்.

### மாறு கண்ணுக்குப் பயிற்சி

கண் தசைகளின் ஒருங்கிணைப்பற்ற செயல் தன்மை காரணமாகவே மாறு கண் பிரச்சினை ஏற்படுகிறது. எனவே, நிச்சயமாக மாறு கண் அதிர்ஷ்டம் அல்ல. மாறு கண் பிரச்சினை தீவிரமாக இல்லாமல் மிக மிகச் சிறிதளவே உள்ள நிலையில் யோகா பயிற்சி மூலம் குறைபாட்டைச் சரி செய்ய முடியும். இத்தகைய பயிற்சியையும் வீட்டிலேயே தொடர்ந்து செய்ய மன உறுதிப்பாடு அவசியம்.

# அரிசியை பதுக்கி வைத்து விற்போர் மீது நடவடிக்கை

## அமைச்சர் ஜோன்ஸ்டன் அதிரடி

அரச, தனியார் நிறுவனங்கள் வைத்திருக்கும் நெல் மற்றும் அரிசியினது அளவு குறித்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூட்டுறவு மற்றும் உள்ளூர்வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக்கிற்கு பணிப்புரை விடுத்துள்ளார். இதன்படி நேற்று தொடக்கம் இந்த அறிக்கை தயாரிப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

அரிசியைப் பதுக்கி வைத்தல் மற்றும் அதன் கட்டுப்பாட்டு விலையிலும் அதிக விலைக்கு விற்பனை செய்தல் போன்ற விடயங்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவோர் எவராக இருந்தாலும் எவ்வித பாரபட்சமுமின்றி அவர்களுக்கெதிராக வழக்குகளை தாக்கல் செய்யுமாறும் அமைச்சர் நுகர்வோர் அதிகார சபையின் தலைவருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வருடம் நவம்பர் மாதத்தில் மாத்திரம் நிர்ணய விலையிலும் அதிக விலைக்கு அரிசியினை விற்பனை செய்த 100 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக இதன் போது அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இவ்வாரம் முழுவதும் அரிசியினை பதுக்கி வைத்திருக்கும் வியாபாரிகளைத் தேடி சுற்றிவளைப்புக்களை முன்னெடுக்குமாறும் அமைச்சர் ரூமி மர்சூக்கிற்கு அறிவித்துள்ளார். (அ-2)

# நாவலர் குரு பூசை விநாடி வினாப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசையை முன்னிட்டு அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் ஆறுமுகநாவலர் சார்ந்த விநாடி வினாப்போட்டியை நடத்தவுள்ளது. இப்போட்டி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இப் போட்டிக்கு 20 வயதிக்குட்பட்ட பாடசாலை மாணவர்களும் 20 வயதிற்கு மேற்பட்ட சைவப் புலவர்கள், இளம் சைவப்புலவர்கள், சைவசித்தாந்த பண்டிதர்களும் பங்கு பற்ற முடியும். பங்குபற்ற விரும்புவோர் பெயர், பாடசாலை, முகவரி, வயது, தொலைபேசி எண் ஆகியவற்றை குறிப்பிட்டு கையொப்பமிட்டு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக தலைவர், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், 153, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார். மேலதிக விபரங்களை 0776132176 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (அ)

# மின்னல் தாக்கி 47 பேர் மரணம்

(கொழும்பு)

இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் நாட்டின் பல பாகங்களிலும் மின்னல் தாக்குதலின் காரணமாக 47 பேர் உயிரிழந்துள்ளனர். ஏப்ரல் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் மின்னல் தாக்குதல் காரணமாக அதிகளவான உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் மட்டும் மின்னல் தாக்கம் காரணமாக 20 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஒக்டோபர் மாதத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். (அ-2)


# ஓராண்டு நினைவலைகள்



வையகத்தின் மைந்தனாக: 25.07.1932

தெய்வத்தின் சொந்தமாக: 09.12.2011

அமரர்

**அருணாசலம் வேலுப்பிள்ளை**

(சின்னப்புடையாரின் பேரன்)

(திதி: வளர்பிறை சதுர்த்தசி) 27.11.2012

ஓடி மறைந்தது ஓராண்டு
வாடி நிற்கின்றோம் நாம் - இங்கு
எம் உடலில் உயிர் வாழும் காலம் வரைக்கும்
எம் உள் இறையாகி என்றென்றும் வாழ்ந்திடுவீர்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி
மற்றும் குடும்பத்தினர்
இல.134, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

(1039)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

293

## கலைஞன் கணிப்பு



### அம்புலிமாமா கதைகள்

கனகதுர்க்கத்தின் மன்னன் கனகசேனன் மக்கள் மனம் மகிழ ஆட்சி புரிந்துவந்தான். அவனுக்கு உறுதுணையாக அமைச்சர் ஆனந்தசர்மாவும் சேனாதிபதி சிம்மநாதனும் இருந்தனர். ஆனந்தசர்மாவின் நுண்ணறிவால் அண்டைநாடுகள் எல்லாம் கனகதுர்க்கத்துடன் நட்புறவே கொண்டிருந்தன. சிம்மநாதனின் போர் புரியும் திறனை அறிந்ததால் எந்த நாடும் கனகதுர்க்கத்தின் மீது படையெடுக்கத் துணியவில்லை.

கனகசேனனுக்கு வேட்டையாடச் செல்வது மிகவும் பிரியமரனது. அதனால் அடிக்கடி காட்டிற்குப்போய் வேட்டையாடிவிட்டு வருவான். இதைப்பற்றி மக்கள் சிலாகித்தே பேசி வந்தார்கள்.

இப்படியே பல வருடங்களாகி விட்டன. தனக்குப் பின் நாட்டை ஆளத் தன் மகன் வீரசேனன் பயிற்சி பெற வேண்டும் என்று எண்ணி கனகசேனன் அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி அதற்கான பட்டாபிஷேக த்தையும் முறைப்படி நடத்தினான். வீரசேனனும் பலதுறைகளில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுத்தன் திறமையை வெளிப்படுத்தி தந்தைக்கு ஏற்ற தனயன் என்ற பாராட்டையும் மக்களிடமிருந்து பெற்றுவிட்டான்.

மக்களுக்குக் குறை எதுவும் இல்லை எனக் கண்ட வீரசேனன் இனித் தன் கவனத்தைத் கலை வளர்ச்சியில் திருப்பலானான். குறிப்பாக அவன் ஓவியக் கலையில் ஆர்வத்தைக் காட்டினான். பல ஓவியங்கள் வைக்கப்பட்டிருந்த சித்திரமகாலை அவன் சிறுவயது முதலே சுற்றிச் சுற்றி வந்து அதிலுள்ள படங்களை ரசித்துப்பார்த்தவன். அதில் வம்ச பரம்பரையாக வந்த கனகதுர்க்க மன்னர்களின் உருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றோடு தன் தந்தை கனகசேனனின் உருவப் படத்தையும் சேர்த்துவைக்க வீரசேனன் விரும்பினான்.

இதற்காக தன் தந்தையின் உருவப்படத்தை எந்த ஓவியர் சரியாக வரைந்து கொடுக்கிறாரோ அவருக்கு இலட்சம் வராகன்கள் பரிசளிக்கப்படும் என்று வீரசேனன் நாடெங்கிலும் பறைசாற்றுவித்தான்.

பல ஓவியர்கள் கனகசேனனின் உருவத்தை வரைந்து வண்ணம் தீட்டிக்கொண்டு வந்து காட்டினார்கள். வீரசேனனோ அவற்றையெல்லாம் பார்த்துவிட்டு எதுவுமே சரியில்லை எனக்கூறி நிராகரித்தான்.

இதற்குக் காரணம் எல்லாப் படங்களிலும் கனகசேனனின் வலது கண் இமைகள் சற்றுக் குறுகி மூடியிருந்தது போலத் தென்பட்டதேயாகும். உண்மையில் கனகசேனனின் வலது கண் அப்படித்தான் இருந்தது.

அதேநாட்டில் ஒரு சிறு கிராமத்தில் கார்மேகன் என்ற இளைஞன் இருந்தான். அவன் ஓவியம் வரைவதில் சிறந்து விளங்கினான். ஆனால் கிராமத்திலிருந்த அவனை ஆதரிப்பவர் யாருமேயில்லை. அதனால் வயிற்றுப் பிழைப்புக்காக அவன் தலைநகருக்குப் போய்ச் சேர்ந்தான்.

அவன் வீரசேனனைக் கண்டு ஐயா! நான் தங்களது தந்தையின் உருவப்படத்தை வரைந்து கொடுக்கிறேன் என்றான்.

அதைக்கேட்ட வீரசிம்மன் ஏளனமாகச் சிரித்து மாபெரும் ஓவியர்களால்கூட என் தந்தையின் உருவத்தைச் சரியாக வரைய முடியவில்லை.


இளைஞனான உன்னாலா முடியும் என்று கேட்டான். கார்மேகனும் என்னால் முடியும். நான் வரைந்து காட்டுகிறேன் என்று சற்றும் தயங்காமல் கூறினான்.

அப்போது வீரசேனன் இதோ பார்! உன்னால் என் தந்தையின் உருவத்தை உள்ளபடியே வரையமுடியாது. நீ முழு நம்பிக்கையுடன் கூறுவதால் ஒரு நிபந்தனை விதிக்கிறேன். நீ மட்டும் சரியாக வரைந்துவிட்டால் இலட்சம் வராகன்களை



கொடுக்கிறேன். நீ சரியாக வரையாவிட்டாலோ உன்னைச் சிறையில் தள்ளிவிடுவேன். வாழ்நாள் முழுவதும் நீ அங்கேயே கிடக்கவேண்டி வரும் சம்மதமா? என்று கேட்டான். அதற்கு கார்மேகனும் உடனே சம்மதித்தான்.

கார்மேகன் ஏனைய ஓவியர்





களைப்போல கனகசேனன் நின்று கொண்டிருப்பது போலவோ அல்லது ஆசனத்தில் வரைந்திருப்பதுபோலவோ வரையவில்லை. அவன் வரைந்த படம் கனகசேனன் குதிரை மீது அமர்ந்து வேட்டையாடும் நிலை யில் வில்லில் அம்பை வைத்து வலது கண்ணைப் பாதி மூடி குறிவைப்பது போல இருந்தது.

அதைக்கண்ட எல்லோருமே ஆஹா! கனகசேனர் வேட்டையாடுவதை அப்படியே இந்த ஓவியர் நன்கு வரைந்திருக்கிறார்.

மன்னருக்கு வேட்டையாடுவது என்றால் எவ்வளவு பிரியம் என்பது வெளிப்படுகிறது.

அவர் அம்பை எய்ய எப்படிக் குறி பார்க்கிறார் என்பதை தத்ரூபமாக ஓவியர் வரைந்திருக்கிறார் என்று பாராட்டினார்கள்.

வீரசேனனும் ஆஹா! அற்புதம் என் தந்தை வேட்டையாடுவதை அப்படியே சித்திரித்திருக்கிறாய்.

நான் கூறிய படி இலட்சம் வராகன்களை கொடுக்கிறேன் என்று சொல்லி பணமுடிப்பையும் கொடுத்தான்.

அப்போது ஆஸ்தான ஓவியர் கார்மேகனைப் பாராட்டி ஓர் ஓவியனின் பார்வை நாலா பக்கத்திலும் செலுத்தப்பட வேண்டும்.

ஏனைய ஓவியர்கள் யாவரும் மன்னர் நிற்பது போலவோ அல்லது உட்கார்ந்திருப்பது போலவோ வரைந்து அவரது முகத்தை உள்ளது உள்ளபடியே வரைந்து காட்டினார்கள். ஆனால் எல்லோர் மனதைச் சட்டெனக் கவர மன்னருக்குப் பிடித்தமான வேட்டையாடும் நிலையை இந்த ஓவியர் வரைந்தார். இவரது சமயோசித புத்தியையும் கலைத்திறனையும் பாராட்டுகிறேன் எனக்கூறிப் புன்னகை புரிந்தார். கார்மேகனும் அந்தப் புன்னகையில் மறைந்திருந்த உட்பொருளைப் புரிந்து கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

114

# சுதந்திர இலங்கை

### சிங்களம் மட்டும் அரச கரும மொழி

கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்கும் எதிராகவிருந்த பெரும்பான்மை சிங்களத் தலைவர்களின் கவனம் இலங்கைத் தமிழர் மேல் திரும்பத் தொடங்கியது. சிங்கள மக்களின் பாரம்பரியப் பகைவர்கள் எனத் தமிழர் சிங்கள பௌத்தர்களால் கருதப்படத் தொடங்கினர். 1950களில் மொழியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ஆரம்பமாகியது. ஆங்கில மூலம் கல்வி கற்பதால் சுய மொழியில் கற்கின்ற பிள்ளைகள் வாய்ப்புகளை இழக்கின்றனர் என்ற சிந்தனை உருவாகியது. ஆதலால் சிங்களம், தமிழ் மூலமான கற்றல் ஆரம்பிக்கப்படவேண்டும்; அரச மொழியாக சிங்களம் இடம்பெற வேண்டும் எனக் கருதினர். 1944 இலேயே சிங்களம் அரச மொழியாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை ஜே.ஆர். ஜயவர்த்தனாதான் வைத்திருந்தார். அத்தோடு தமிழும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்ற திருத்தத்தோடு அப்பிரேரணை நிறைவேறியிருந்தது.1951 இல் சிங்களத்தையும் தமிழையும் உடனடியாக அரச கரும மொழியாக்கவேண்டும் எனப் பண்டார நாயக்கா வற்புறுத்தினார். 1953-1956 களில் மொழி பற்றி சர்ச்சைகள் அரசியலில் முதன்மை பெற்றன.

பிரதமராக இருந்த கொத்தலாவல, தமிழுக்கும் சம உரிமை வழங்கப்படும் என்று யு.என்.பி.யின் நிலைப்பாட்டை வெளியிட, ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்திலிருந்த பண்டாரநாயக்கா தன் கருத்தினை மாற்றி 24 மணி நேரத்திற்குள் சிங்களம் மட்டும் சட்டத்தை தான் நிறைவேற்றுவதாக அறிவித்தார். அதனால், யு.என்.பி.யும் தன் மொழிக் கொள்கையை சிங்களம் மட்டும் என மாற்றிக்கொண்டது. 1956 இல் சிங்களம் மட்டும் மசோதாவை, அரசைக் கைப்பற்றிக்கொண்ட பண்டாரநாயக்கா பாரளுமன்றத்தில் கொண்டுவந்தார். அம்மசோதா ஆதரவாக 66 வாக்குக்களையும் எதிராக 29 வாக்குகளையும் பெற்று நிறைவேறியது.

அதனால், 50 ஆண்டுகளின் பின்னர் முதலாவது கொடுமையான இன வன்செயலுக்கு 1956 ஆம் ஆண்டின் மொழிப்பிரச்சினை தொடர்பான வற்புறுத்தல் வழிவகுத்தது. சமஷ்டிக் கட்சி இச்சட்டத்திற்கு எதிராக பாராளு மன்றத்திற்கு முன்பாக ஒரு சத்தியாக்கிரகம் செய்வதாக முடிவு செய்தது. அதனால், முதன் நாள் இரவே பாராளுமன்றத்தைச் சுற்றி முள்வேலிகள் அமைக்கப்பட்டன. ஆயுதம் தாங்கிய பொலிசார் காவலுக்கு நிறுத்தப்பட்டனர். ஆனாலும் தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தை- பாராளுமன்றத்திற்கு முன்பாக, தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து, காலி முகத்திடலில் சாத்வீகமாகச் சத்தியாக்கிரகம் செய்தனர். பொலிசார் பார்த்துக்கொண்டிருக்க தடிகளாலும் கற்களாலும் அவர்கள் தாக்கப்பட்டனர். பெயிரா ஏரியில் தூக்கி வீசப்பட்டனர். தமிழ்த் தலைவர்களும் தொண்டர்களும் சிங்களக் காடையர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து தமிழர்கள் காணுமிடங்களில் தாக்கப்பட்டார்கள். இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமான இனக்கலவரம் ஏற்படலாயிற்று. தமிழர் போதியளவு தாக்கப்பட்டபின்னர், காலங்கடந்து அவசர காலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அகதிகளான தமிழர்கள் கப்பலில் வடக்கே அனுப்பப்பட்டனர். கொழும்புத் தமிழருக்கு எதிராகவும், கிழக்கு மாகாணத்தில் கல்லோயா குடியேற்றத்திட்டத்தில் வசித்த தமிழ் மக்களுக்கு எதிராகவும் வன்முறைகள் வெடித்தன. அவ்வன்முறையின் போது 150 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். சத்தியாக்கிரகப் போராட்டம் ஆயுத முனையில் அடக்கப்பட்டது.



தந்தை செல்வாவின் கட்சி சத்தியாக்கிரகம் 1961-திருகோணமலை



பண்டா-செல்வா ஒப்பந்தத்தை இரத்தாக்கும்படி பண்டாவின் வீட்டின் முன் பிக்குகள் ஆர்ப்பாட்டம்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா


### ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம்

அதனைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சி பலவகைப் போராட்டங்களை முடுக்கிவிட்டது. அவற்றில் ஒன்று ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டமாகும். மோட்டார் வாகனங்களில் ஸ்ரீ என்ற சிங்கள எழுத்துடன் கூடிய இலக்கத்தகடு வழங்கப்பட்டு வர[illegible] அழித்து சிங்கள [illegible] தமிழில் சிறி இடும் போராட்டமாக அது அமைந்தது. இது வடக்கே ஆரம்பித்து கிழக்கேயும் பரவியது. இதன் எதிரொலியாக கொழும்பில் தமிழ் எழுத்துக்களை தார்பூசி அழிக்கும் போராட்டம் சிங்களவர்களால் தொடங்கப்பட்டது.

### தொடரும் இனக் கலவரம்

### பண்டா- செல்வா ஒப்பந்தம்

இந்த நாட்டின் அரசியலில் இதன் பின்னர் இனப்பிரச்சினை தீவிர மடைந்தது. 1957 இல் சமஷ்டிக் கட்சி பெரியதொரு சத்தியாக் கிரகத்தை செய்ய விருப்பதாக அறிவித்த போது, பிரதமர் பண்டார நாயக்கா தமிழ்த் தலைவர்களுடன் ஒரு வகையில் ஒத்துப்போக விரும்பினார். அதனால், பண்டா- செல்வா ஒப்பந்தம் ஒன்று, இரு [illegible] பேசி முடிவெடுத்த [illegible] 26ஆம் திகதி கைச்சாத்தானது. அதில் வடக்குக் கிழக்கில் நடைபெற்றுவரும் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல், சிறுபான்மை மக்களின் தேசிய மொழியான தமிழை அங்கீகரித்தல், வடக்குக் கிழக்கின் நிர்வாக மொழியாகத் தமிழ் விளங்கல், பிரதேச சபைகளை உருவாக்கி அவற்றின் மூலம் பிரதேச சுயாட்சி வழங்கல் முதலான உரிமைகளை இந்த ஒப்பந்தம், வழங்குவதாகக் கூறியது. தீவிரப் போக்குடைய பிக்குகள் உட்பட சிங்களவர்களில் ஒருபகுதியினர் இந்த ஒப்பந்தம் சிங்களவர்களைப் பாதிக்கும் துரோகச் செயல் எனப் பிரகடனப்படுத்தினர். இம்மசோதாவுக்கு எதிராக கண்டியை நோக்கி ஒரு யாத்திரை, ஜே.ஆர்.ஜயவர்த்தனாவால் மேற் கொள்ளப்பட்டது. இவை யாவற்றிற்கும் மேலாக பிக்கு எக்சத் பெரமுனையின் சார்பாக பௌத்த பிக்குகள் பிரதமரின் வீட்டின் முன் கூடி, ஒப்பந்தத்தை கிழித்தெறியும் படி ஆர்ப்பாட்டம் செய்தனர். ஒப்பந்தமாகி-எட்டு மாதங்களில் இந்த ஒப்பந்தம் பண்டாவால் கிழித்தெறியப்பட்டது.



தந்தை செல்வாவும் கட்சியினரும் பாராளுமன்றத்தில்-1956

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை

## 2012 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள் — மேல்மாகாணம்

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## பகுதி I

**முக்கிய அறிவித்தல்**

**(i) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**(ii) 1 - 40 வரையான வினாக்களின் ( 1 ), ( 2 ), ( 3 ), ( 4 ) ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்யுங்கள்.**

**(iii) உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு கேள்விக்கும் உரிய இலக்கமிடப்பட்ட வட்டத்தினுள் (X) இடுங்கள்.**

**★ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல்பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "பார் என்று பெயர் படைத்தாய் **ககனத்துறும்** போது" ககனம் என்பதன் ஒத்தசொல்
   1. மேகம் 2. ஆகாயம் 3. நிலம் 4. நெருப்பு
2. "கோட்டை இடித்து அகழ் **குன்றாக்கி...**" குன்று என்பதன் ஒத்தசொல்
   1. வெள்ளம் 2. அகழி 3. வெற்பு 4. குழி
3. நீ வாதாடியதில் **நியாயம்** மட்டுமல்ல ஒரு தேவையும் இருந்தது. நியாயம் என்பதன் எதிர்ச்சொல்
   1. அநியயம் 2. அநியாயம் 3. அனியாயம் 4. அந்நியாயம்
4. "நானொருவன் மட்டிலும் பிரிவென்பதோர் **நரகத்** துழலுவதோ" நரகம் என்பதன் எதிர்ச்சொல்
   1. பாதாளம் 2. கீழுலகம் 3. சுவர்க்கம் 4. உலகம்
5. அரவம், பணி, கட்செவி ஆகிய மூன்றையும் குறிக்கும் ஒரு சொல்
   1. கடமை 2. சத்தம் 3. பாம்பு 4. கண்

**★ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. கடிகாரத்தை உறுலோசு என அழைக்கும் முறை எப்பிரதேசத்திற்குரிய கிளைமொழி
   1. மலையகக் கிளைமொழி 2. தெற்குக் கிளைமொழி
   3. வடக்குப் பிரதேசக் கிளைமொழி 4. கிழக்குக் கிளைமொழி
7. "மாறுதல் இந்த ஜெகத்தின் முதலாவது விதி" ஜெகம் என்ற வடசொல்லின் தமிழ் வடிவம்
   1. சகம் 2. செகம் 3. சபம் 4. ஜகம்
8. குறித்தநாளில் நீதிமன்றத்தில் சமூகமளிக்கும்படி ஒருவருக்கு நீதிபதியால் விடுக்கப்படும் அதிகாரபூர்வமான கட்டளை
   1. பிடியாணை 2. தேடற்கட்டளை 3. அழைப்பாணை 4. அறக்கட்டளை
9. ஸ்கான் (Scan) என்ற ஆங்கிலச் சொல்லிற்குரிய கலைச் சொல் வடிவம்
   1. வருடி 2. இரட்டிப்பு 3. தட்டு 4. நெகிழ்தட்டு
10. சுருங்கை என்பது எம்மொழிச் சொல்
    1. பாரசீக மொழி 2. அரபு மொழி 3. கிரேக்க மொழி 4. ஒல்லாந்து மொழி
11. அனுமன் சீதையைக் கண்டனன். கண்டனன் என்பதன் பகுதி
    1. கண் 2. கண்டு 3. காண் 4. கண்ட
12. தமயந்தி சுயம்வர மண்டபத்தில் உள்ளம் ஊசலாடினாள். இதில் வந்த சினைப் பெயர்
    1. சுயம்வரம் 2. உள்ளம் 3. தமயந்தி 4. மண்டபம்
13. பெயர் + பெயர் சேர்ந்த கூட்டுப் பெயருக்கு உதாரணம்
    1. கட்டுரை 2. எறிகல் 3. எழுதுகோல் 4. வானொலி
14. விமலனுக்கு அண்மையில் பார்த்த படம் ஞாபகத்தில வந்தது. இவ்வாக்கியத்தின் எழுவாய்
    1. விமலன் 2. அண்மை 3. படம் 4. ஞாபகம்
15. அழகு, அளகு, அலகு ஆகிய ஒத்தொலிக்கும் சொற்களின் பொருள் ஒழுங்கு முறை
    1. பேடு, பிரிவு, வனப்பு 2. வனப்பு, பிரிவு, பேடு
    3. வனப்பு, பேடு, பிரிவு 4. பிரிவு, பேடு, வனப்பு
16. துள்ளலோசையைக் கொண்ட பாவினம்
    1. கலிப்பா 2. வஞ்சிப்பா 3. வெண்பா 4. அகவற்பா
17. முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை
    1. பன்னிரண்டு 2. தொண்ணூறு 3. முப்பது 4. பதினெட்டு
18. பின்வருவனவற்றுள் புறச்சுட்டாய் வந்த சொல்
    1. அது 2. அவ்வீடு 3. அண்மை 4. அவை
19. பெயராகவும் வினையாகவும் வராத சொல்
    1. தட்டு 2. துணி 3. தறி 4. தேடு
20. செய்வேன் என்ற உடன்பாட்டு வினையின் எதிர்மறை வடிவம்
    1. செய்யான் 2. செய்தேன் 3. செய்திலன் 4. செய்யமாட்டேன்
21. இராமன் தான் அக்கொடிய செயலைச் செய்தான். இவ்வாக்கியத்தில் வந்த இடைச்சொல்
    1. தான் 2. அம்பு 3. எய்து 4. இராமன்
22. ஆலயந் தொழுதல் சாலவும் நன்று இதில் வந்த தொழிற்பெயர்
    1. ஆலயம் 2. தொழுதல் 3. சாலவும் 4. நன்று
23. "சுவாமிக்கு நட்சத்திரக் குழந்தை பிறந்துவிட்டது" என்று கூறினாள் குழந்தை ரோஹினி. இவ்வாக்கியம்
    1. கலப்பு வாக்கியம் 2. கூற்று வாக்கியம்
    3. தொடர் வாக்கியம் 4. கூட்டு வாக்கியம்
24. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வாக்கியத்தைத் தெரிவு செய்க.
    1. குழந்தை அழுதது 2. உணவு சாப்பிட்டது
    3. கடிதம் எழுதினேன் 4. பாடல் பாடினேன்
25. தாழைமடல் பெரிது, மகிழம்பூ சிறிது. பெரிது, சிறிது என்பன
    1. தெரிநிலை வினை முற்று 2. குறிப்பு வினை முற்று
    3. குறிப்பு வினைப் பெயரெச்சம் 4. தெரிநிலை வினைப் பெயரெச்சம்
26. மரமேறி என்ற சொல் எவ்வகைப் புணர்ச்சி
    1. கெடுதல் 2. தோன்றல் 3. திரிதல் 4. இயல்புப் புணர்ச்சி
27. விண்மீன் சுடர்விட்டுக் கொண்டிருந்தது. "விண்மீன்" என்பது என்ன தொகை
    1. உவமைத்தொகை 2. பண்புத்தொகை
    3. வினைத்தொகை 4. வேற்றுமைத் தொகை
28. பன்மைப் பெயராக வராத சொல்
    1. மழை 2. காய் 3. புல் 4. நிலம்
29. குயில் கூவும் என்பது போல கோழி
    1. கூவும் 2. கொக்கரிக்கும் 3. கத்தும் 4. அலறும்
30. "பசியுண்டாதல்" என்பதனை விளக்க பொருத்தமான மரபுத் தொடர்
    1. வயிறு குளிர்தல் 2. வயிறெரிதல் 3. வாய்திறத்தல் 4. வயிறுகடித்தல்
31. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல் வரிசை
    1. தளர்ச்சி வளர்ச்சி முயற்சி உயற்சி 2. தளர்ச்சி வளர்ச்சி முயற்சி உயர்ச்சி
    3. தளச்சி வளற்சி முயர்ச்சி உயற்சி 4. தளர்ச்சி வளர்சி முயற்சி உயர்ச்சி
32. குளுகுளு என்று இருந்த மாணவன் இன்று எலும்பும் தோலுமாக கன்னங்கரிய முகத்துடன் மெல்ல மெல்ல நடந்து வந்தான். இதில் வந்த இரட்டைக் கிளவி
    1. எலும்பும் தோலும் 2. மெல்ல மெல்ல
    3. கன்னங்கரிய 4. குளுகுளு
33. "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற பழமொழியை விளக்கும் வேறோர் பழமொழி
    1. செல்வமென்பது சிந்தனையின் நிறைவே
    2. பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்
    3. கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு
    4. பணம் பந்தியிலே குணம் குப்பையிலே
34. பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்க.
    "சிறைக்கைதிகள் தம்மைத் தாமே..."
    1. வருந்தினர் 2. வருந்தின 3. வருந்தது 4. வருத்தினர்
35. நெருக்கமான நட்பை விளக்குவதற்குப் பொருத்தமான உவமைத்தொடர்
    1. தாமரை இலைத் தண்ணீர் போல 2. ஓடும் புளியம் பழமும் போல
    3. நகமும் சதையும் போல 4. சுடச் சுட ஒளிரும் பொன்போல
36. பின்வருவனவற்றுள் சரியாகக் குறியீடுகள் இடப்பட்ட வாக்கியம்
    1. "ஆகா! அதற்கென்ன, நன்றாகப் பேசலாமே" என்று சொன்னார் சிவப்பிரகாசம்
    2. "ஆகா! அதற்கென்ன! நன்றாகப் பேசலாமே என்று சொன்னார்" சிவப்பிரகாசம்
    3. "ஆகா அதற்கென்ன? நன்றாகப் பேசலாமே என்று" சொன்னார் சிவப்பிரகாசம்
    4. "ஆகா! அதற்கென்ன! நன்றாகப் பேசலாமே என்றார் சிவப்பிரகாசம்"
37. "திருக்குறளில் இல்லாத பொருள் வேறெங்கும் இல்லை" இங்கு கையாளப்பட்ட அணி
    1. உருவகம் 2. தன்மை நவிற்சி
    3. உயர்வு நவிற்சி 4. தற்குறிப்பேற்றம்
38. பின்வருவனவற்றுள் பெயரெச்சத் தொடராக அமைந்த வாக்கியம்
    1. வளர்ந்த பிள்ளை 2. வளர்ந்து வந்தது
    3. பிள்ளை வளர்ந்தது 4. வளர்ந்தது பிள்ளை
39. பின்வரும் வாக்கியத்திலுள்ள முக்கியமான கருத்தைத் தெரிவு செய்க.
    காற்றாகிய தளபதி மிக்க வேகத்துடனும்
    சத்தத்துடனும் வந்து முகிலாகிய கப்பற்படைகளைச் சேர்த்தது
    1. காற்று தளபதியானது 2. காற்று வேகமாக வீசியது
    3. முகில் கப்பற்படையை சேர்த்தது 4. காற்று முகிற்கூட்டங்களை ஒன்று சேர்த்தது

**★ கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க**

40. அ. அங்கே சித்திரங்களையும் வண்ண ஓவியங்களையும் சேர்த்துக் கொண்டார்.
    ஆ. இறுதியில் இமாசலத்திலமைந்த ஆச்சிரமத்திற்குச் செல்லத்திட்டமிட்டார்.
    இ. அதேவேளை தாகூர், அன்னிப்பெசன்ற் ஆகியோரது தொடர்பும் கிடைத்தது.
    ஈ. அதற்கிடையில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.
    உ. கலாயோகி ஆனந்தகுமாரசாமி இந்தியாவில் விரிவான யாத்திரையை மேற்கொண்டார்.
    1. உ, அ, இ, ஆ, ஈ 2. அ, உ, ஆ, இ, ஈ
    3. ஆ, இ, ஈ, உ, அ 4. அ, ஆ, இ, ஈ, உ

## பகுதி II

**★ எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

**1. சுருக்கமான விடை தருக**

01. பின்வரும் தொடரைப் பிரித்தெழுதுக.
    தெருவெல்லாம் முழுமெய் சங்கம்
02. 'வரை' என்ற சொல்லைப் பெயராகவும், வினையாகவும் அமையுமாறு வாக்கியம் அமைக்க.
03. "எந்த நிகண்டில் பார்த்தீர்? துமி என்ற சொல்லே தமிழில் கிடையாதே" இக் கூற்றிலுள்ள நிகண்டு என்பது எத்தகைய நூல்?
04. அ. நாம் கல்விச் சுற்றுலா சென்றோம்.
    ஆ. பாடங்களுடன் தொடர்புடைய விடயங்களை அவதானிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதனை தொடர் வாக்கியமாக்குக.

05. 'நடந்தான்' என்ற சொல்லை பகுபத உறுப்பாகப் பகுத்துக் காட்டுக.

06. ஒரு பெயர், இரு விகுதிகள் சேர்ந்த ஒரு ஆக்கப் பெயர் தருக.

07. பெயர்ச் சொல்லின் பண்புகள் இரண்டு எழுதுக.

08. ஒரு பொருளின் தன்மையை மிதமிஞ்சி உயர்த்திக் கூறுவது எவ்வகை அணி?

09. "நுண்மான் நுழைபுலம்" எனும் அருஞ் சொற்றொடரை வைத்து பொருள் புலப்பட வாக்கியம் ஒன்று அமைக்குக.

10. அசூயை என்ற வடசொல்லின் தமிழ் வடிவம் யாது?

(10 X 02 = 20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(அ) நமது நாட்டில் இன்று டெங்கு எனும் கொடிய நோய் பரவி பலரது உயிர்களைக் காவு கொண்டுள்ளதை பத்திரிகை வாயிலாக அறிகின்றோம். இதற்கு காரணம் சூழற் சுத்தம் பேணப்படாமையே. எனவே சூழற்சுத்தம் பேணுவதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு ஒரு விளக்கக் கட்டுரை

(ஆ) வாழ்வோடு இயைந்து, உணர்வை வெளிப்படுத்தும் நாட்டார் இலக்கியங்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்று கூறும் ஒருவருக்கும் இதை மறுத்து அவை அருகி வருகின்றன எனக் கூறும் மற்றொருவருக்கும் இடையிலான உரையாடல்

(இ) குறிஞ்சி நிலமான மலைசார்ந்த இடங்களின் வனப்பு, மண்மேடு, மலைத்தொடர், பாறை, ஈரலிப்பு நிறைந்த இன்பகரமான சுவாத்தியமும் உடைய மலைப்பிரதேசம் மகிழ்ச்சியையும் மன அமைதியையும் தருகின்றது. இவ்வகையில் நீர் ரசித்த மலைக்காட்சி பற்றிய வர்ணனைக் கட்டுரை.

(ஈ) பதற்றமான நேரத்தில் அவனுக்கு உள்ளங்கையில் வியர்வை வரும். இப்போதும் வியர்வை வந்தது. கைக்குட்டையால் கையைத் துடைத்துக் கொண்டான். தந்தையின் இழப்பை ஏற்க மறுத்த இதயத்தோடும் பிள்ளைகளே உலகமென வாழும் தாயையும் எண்ணியபடியே உள்ளே செல்கிறான்... இதனைத் தொடர்ந்து ஒரு கற்பனைச் சிறுகதை.

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

(25புள்ளிகள்)

இப்பொழுது மேனாட்டு நாகரிகம் அதன் அத்திபாரத்துடன் ஆடிக்கொண்டிருக்கின்றது. உலோகாயுதம் என்ற மணற் தரையை அத்திபாரமாகக் கொண்ட கட்டடங்கள் எவ்வாறு மகத்தானவையாக இருப்பினும் ஒரு காலத்தில் வீழ்ந்தே தீரும். இதற்கு உலக சரித்திரமே சான்றாக இருக்கிறது. மக்களுக்கு பின் மக்கள் தோன்றி உலோகாயுதத்தை அடிப்படையாகக் கொண்டு தங்கள் நாகரிகத்தை கட்டினார்கள். தூய வாழ்க்கையே உண்மையானதென அவர்கள் நினைத்தார்கள். ஒருவன் இறக்கும்போது மேல்நாட்டு மொழிகளில் அவன் உயிரை விட்டு விட்டதாக சொல்கிறார்கள். ஆனால் நம் மொழியில் அவன் உடலை விட்டு விடுவதாக நாம் சொல்கிறோம். மேல்நாட்டில் மனிதன் உடம்பு என்றும் அது உயிரைப் பெறுவதாகவும் நம்புகிறார்கள். ஆனால் நாம் மனிதன் உண்மையில் ஆத்மா என்றும் அது உடலைத் தாங்கி தோன்றுகிறது என்றும் நினைக்கிறோம். இதில் மகத்தான வித்தியாசமிருக்கிறது. சரீர சுகம் முதலிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உண்டாக்கப் பெற்ற நாகரிகங்கள் எல்லாம் கொஞ்சக்காலம் நிலை பெற்றிருந்து பின் ஒன்றன்பின் ஒன்றாக உலகிலிருந்து மறைகின்றன. ஆனால் இந்தியாவின் நாகரிகமும் இந்தியாவிலிருந்து பெற்ற சீனா, ஜப்பான் தேசங்களின் நாகரிகமும் இன்னும் வாழ்ந்து வருகின்றன. அவைகளில் இக்காலத்தில் புதியதொரு மறுமலர்ச்சியும் காணப்படுகிறது. அவை பல தடவைகள் அழிக்கப்பட்டாலும் பின்னரும் இன்னும் அதிக சிறப்புடைக் கிளம்புவதைக் காண்கின்றோம். உலோகாயுத நாகரிகங்கள் ஒருமுறை அழிந்தால் மறுபடியும் அவை உயிர் பெறுவதில்லை. ஆதலால் பொறுமையுடன் இருப்பீர்களாக! எதிர்காலம் நம்மிடம்தான் இருக்கின்றது.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமாக வாக்கியங்களில் விடை தருக.

ஏர் முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லே!
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே!

பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே – பயிர்
பூப்பதும் காய்ப்பதுவும் மாரியினாலே – நாம்
சேமமுற நாள் முழுதும் உழைப்பதனாலே – இந்தத்
தேசமெல்லாம் செழித்திடுது நம்மகையாலே!

நெத்தி வேர்வை சிந்தினோமே முத்து முத்தாக – அது
நெல் மணியாய் விளைஞ்சிருக்குக் கொத்துக்கொத்தாக
பக்குவமாய் அறுத்து அதைக் கட்டுக்கட்டாக – அடிச்சுப்
புதரு நீக்கிக் குவிச்சு வைப்போம் முட்டுமுட்டாக!

வளர்ந்து விட்ட பருவப் பெண் போல் உனக்கு வெட்கமா? – தலை
வளைஞ்சு சும்மா பாக்கிறியே தரையின் பக்கமா – இது
வளர்த்து விட்ட தாய்க்குத் தரும் ஆசை முத்தமா? – என்
மனைக்கு வரக் காத்திருக்கும் நீ என் சொத்தம்மா
(கவிஞர் மருதகாசி)

01. நிகரற்ற தொழில் எதுவெனக் கூறப்படுகிறது?

02. முத்துமுத்தான வியர்வைக்குக் கிடைத்த பயன் என்ன?

03. நெல்லை எவ்வாறு வீட்டிற்கு கொண்டு சேர்க்கின்றனர்?

04. விளைந்த நெற்கதிரை கவிஞர் எவ்வாறு உவமிக்கிறார் விளக்குக.

05. அவர்களின் செயல்களாகக் கூறுவன யாவை?

(5 X 2 = 10 புள்ளிகள்)

5. அ. நீர் படித்துச் சுவைத்த சிறுகதை ஒன்றினைப் பற்றி விமர்சனவடிவில் 100 சொற்களில் உமது நண்பனுக்கு கடிதம் ஒன்று எழுதுக. (கதைக்கரு கதாபாத்திரங்கள் மட்டும்)

அல்லது

உமது பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா பற்றிய அறிக்கை ஒன்று தயாரிக்குக. (100 சொற்களில்)

(15 புள்ளிகள்)

# பகுதி III

★ 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை தருக.

01. சுருக்கமான விடை தருக.

01. "சனசமூக நிலையம் ஆண்டுக் கூட்டம் விடயமாக" இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

02. "பெருநிழல் மேல் குளிர்தேடி ஊரும் இளங்காற்று" இவ்வடிகளின் மூலம் சொல்லப்படும் செய்தி யாது?

03. "பிறக்கிடும் பள்ளம் தனக்கிடு பள்ளம்" இப்பழமொழியின் கருத்தினைத் தருக.

04. நந்திக் கலம்பகம் எவ்வகை இலக்கியத்தைச் சார்ந்தது?

05. கொண்டு கூட்டி எழுதுக

"ஓடுகிற மேகங்காள்! ஓடாத தேரில் வெறும்
கூடு வருகுதென்று கூறுங்கள் – நாடியே
நந்திச்சீ ராமனுடை நல்நகரில் நல்நுதலைச்
சந்திச்சீர் ஆமாகில் தான்"

06. "மாம்பழ வாயினிலே குழலிசை
வண்ணம் புகழ்ந்திடுவோம்"
இவ்வடியில் இடம் பெற்றுள்ள அணி யாது? விளக்குக.

07. 'கடற்புரம்' எனும் கவிதையின் ஆசிரியர் யார்?

08. தனிமனித பிரச்சினையைப் பிரதிபலிக்கின்ற பாடநூலில் இடம்பெற்ற சிறுகதை ஒன்றின் பெயரைக் குறிப்பிடுக.

09. 'கட்டுவாரு இப்பத்தானே பட்டத்துக்கு வந்திருக்கிறாரு' இதனை எழுத்து வழக்கில் எழுதுக.

10. தனிப்பாடற் திரட்டு என்றால் என்ன?

(02 X 10 = 20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட்பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. தடித்த எழுத்திலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்குக.

அ. அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் – அக் குளத்திற்
**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே**
ஒட்டி உறுவார் உறவு.

ஆ. **மடல் பெரிது தாழை மகிழினது கந்தம்**
**உடல் சிறியர் என்றிருக்க வேண்டா** – கடல் பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்

இ. கீரியின் உடல் வண்ணம் என்பது காட்சிப் புலனைத் தொடுகிறது. அதே நேரத்தில் மென்மையும் உட்கிடையாக உள்ளது. மெத்தை என்றதும் பல இன்பமான எண்ணங்கள் அச்சொல்லையொட்டித் தோன்றுவது இயல்பு. கடற்கரையில் அமைதியாக உட்கார்ந்திருத்தல், மெல்லிய காற்று வீசச் சற்றுக் கண்ணயர்தல், தனியாகவும் கூட்டமாகவும் இருந்து ஆறுதல் பெறுதல் ஆகியன எல்லாம் எம் மனக் கண்ணுக்குத் தோன்றுகின்றன. **மன மெத்தைக்கும்** ஏற்ற நினைவுகள் இவை. பார்வைக்குரிய காட்சிப் பொருளானது துய்த்து உணரக் கூடிய பொருளாகி விடுகிறது அல்லவா? ஆனால் அத்துடன் நின்று விடவில்லை. கவிஞர் கடலோரத்திலே அலைகள் வந்து புரள்வதையும் காண்கிறார். மெத்தை போல் மென்மையான பிறிதொரு பொருளும் அதன் தொடர்பும் கவிஞருக்கு நினைவுக்கு வருகின்றன. அவை முந்திய உணர்வோடு இறுகப் பிணைந்து கவிதையை மேலும் செறிவு உள்ளதாக்குகின்றது.

அறிவியல் பார்வை என்பதன் மூலம் ஓர் அணுகு முறையை நாம் குறிப்பிடுகின்றோம். பொதுவாக அறிவியல் உலகம் நம்பிக்கையின் அடிப்படையில் எதையும் ஏற்றுக் கொள்ளாத மரபை உடையது. **எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் எப்பொருள் எத்தன்மையதாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவியல். உள்கின்** அடிப்படைக் கொள்கையாயினும் கோட்பாடாயினும் அவை முறையான வாதங்கட்கும் சோதனைகட்கும் உட்படுத்தப்பட வேண்டும். அவற்றின் அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். இது அறிவியல் உலகின் மரபு.

(5 X 4 = 20 புள்ளிகள்)

03. "கல்வியானது ஆண் மக்களுக்கும் தான் வேண்டுமேயல்லாமல் பெண்களுக்கும் வேண்டுவதில்லை" என்ற கூற்றை ஆசிரியர் எவ்வாறான சான்றுகள் மூலம் நிராகரிக்கின்றார்?

அல்லது

"பார்வைகள்" எனும் சிறுகதையில் வைத்திய அதிகாரியின் வார்த்தைகளால் சிறுவனின் மனம் தளர்வடைவதும் அம்மனம் மீண்டும் எவ்வாறு உறுதிப் பாடடைகின்றது என்பதையும் எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

04. "சிறு குழந்தைகள் முதல் பெரிய பண்டிதர்கள் வரை அனைவரும் படித்து இன்புறுதற்குரிய பாடல்களைப் பாரதியார் பாடியுள்ளார்" பாரதியார் கவிநயம் என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

அல்லது

தமயந்தியின் சுயம்வரத்தின்போது வருகை தந்திருந்த மன்னர்களின் முன்பிருந்த மனநிலையையும் பின்பிருந்த மனநிலையையும் நளவெண்பா பகுதியினூடாக விளக்குக.

(15 புள்ளிகள்)

★ ஐந்தாம், ஆறாம், ஏழாம் (5, 6, 7) வினாக்களுக்குள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

05. நீதிப் பாடல்களில் நான் மணிக்கடிகை என்னும் பகுதி மூலம் விளக்கப்படும் நீதிக் கருத்துக்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

06. தனிப்பாடல்களை ஆதாரமாகக் கொண்டு விடையளிக்குக.

★ காளமேகப் புலவரின் பாடலில் கலப்படத்தில் ஏற்பட்ட வெறுப்பையும் நிலவுக்கும் மலைக்கும் இடையே காணப்படும் ஒப்புமையையும் கூறுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)


07. சோழ மன்னனினதும் பாண்டிய மன்னனினதும் பட்டத்து யானைகளின் இயல்புகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு மீது இப்போ தீவிரமாகவே குற்றச்சாட்டுகள் எதிரொலிக்கத் தொடங்குகின்றன

-தொல்காப்பியன்-



பிரித்தானிய நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுவின் புதிய அறிக்கை ஒன்றை அடுத்து, கொமன் வெல்த் தலைவர்களின் உச்சி மாநாடு அடுத்த ஆண்டு இலங்கையில் நடக்குமா 'என்ற கேள்வி எழுந்துள்ளது. கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்துவதற்கு இலங்கையைத் தெரிவு செய்தது முற்றிலும் தவறான முடிவு என்று அந்த அறிக்கையில் அடித்துக் கூறப்பட்டுள்ளது. அதனால், இந்த மாநாட்டை பிரித்தானிய பிரதமர் டேவிட் கமுரூன் புறக்கணிக்க வேண்டும் என்று பிரித்தானிய நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக்குழு கேட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாடு கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடந்தபோதே, அடுத்த மாநாட்டை நடத்தும் வாய்ப்பு இலங்கைக்கு வழங்கப்படக் 'கூடாது என்று கடுமையான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2013 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டையில் இந்த மாநாட்டை நடத்துவதற்குக் கிடைத்த வாய்ப்பை பறிகொடுத்து விடக் கூடாது என்பதற்காக, இலங்கை அரசாங்கம் அப்போது பெரும் போரட்டங்களை நடத்தவேண்டியிருந்தது.

ஒரு வழியாக, பேர்த்தில் நடந்த கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டின்போது, இலங்கையிடம் இருந்து அந்த வாய்ப்புப் பறிபோகாமல் பார்த்துகொண்டது இலங்கை அரசாங்கம். ஆனாலும், கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர், இலங்கையில் நடக்கும் கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டை புறக்கணிக்கப்போவதாகவே அறிவித்திருந்தார்.

·மனித உரிமைகள் நிலைமைகளில் இலங்கை முன்னேற்றத்தைக் காண்பிக்காதவரை, அந்த முடிவில் இருந்து பின்வாங்கப்போவதில்லை என்று அவர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். இப்போது, பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனும் அதே முடிவை எடுக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு இந்த அழுத்தங்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டதாயினும், அவை புறநிலையில் இருந்தே, அமைப்புகள் சார்ந்த அழுத்தங்களாகவே வந்தன். ஆனால், இப்போது வந்துள்ள அழைப்பு அவரால் தட்டிக் கழிக்க முடியாத இடத்தில் இருந்து வந்துள்ளது. அதாவது பிரித்தானிய நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுவில் இருந்து வந்துள்ள இந்த அழுத்தத்தை டேவிட் கமரூன் இல்குவாகப் புறக்கணித்து விடமுடியாது. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் உள்ள நாடாளுமன்ற வெளிவிவகாரக்குழு என்பது சக்திவாய்ந்தது.

வெளிநாட்டுக்கொள்கை சார்ந்த முடிவகளை எடுப்பதில்- இராஜதந்திர விவகாரங்களில் -வெளிவிவகார அமைச்சின் நிர்வாகத்தில் செல்வாக்கைச் செலுத்தக் கூடியதே இந்த வெளிவிவகாரக்குழு. 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் இந்தக் குழுவில் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பிரதானமான மூன்று கட்சிகளான கொன்சவேட்டிவ், லிபரல், லிபரல் ஜனநாயக கட்சி ஆகியவை பிரதிநிதித்துவம் செய்கின்றன. அதாவது இது ஒரு அனைத்துக்கட்சித் தெரிவுக் குழு போன்றது.

இலங்கையில் இது போன்று அவ்வப்போது நியமிக்கப்படும். ஆனால், பிரித்தானியாவில் இது நிரந்தரமாகவே செயற்படுகிறது. சுதந்திரமான முறையில் இந்தக் குழு, பல்வேறு தரப்பினரிடமும் விசாரணைகளை நடத்தியே, தமது அறிக்கையைத் தயாரிக்கிறது. இந்தக் குழுவின் ஆகப்பிந்திய அறிக்கை கொமன்வெல்த்தின் எதர்காலமும் பங்கும் என்ற தலைப்பிலானது.

கடந்தவாரம் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையின் தொடக்கத்திலேயே கொழும்பில் இந்த மாநாட்டை நடத்த எடுக்கப்பட்ட முடிவு தவறானது என்று சுட்டுவிரல் நீட்டப்பட்டுள்ளது. மனித உரிமைகள் நிலைமைகளில் முன்னேற்றம் எட்டப்படாமல், இந்த மாநாட்டில் பங்கேற்கப்போவதில்லை என்று பிரித்தானியப்பிரதமர் டேவிட் கமரூன் வெளிப்படையாகவே அறிவிக்கவேண்டும் என்று இந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பை பிரித்தானியப் பிரதமர் எவ்வாறு எடுத்துக்கொள்ளப்போகிறார் என்பது குறித்து தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. ஆனால், ஒரு அனைத்துக்கட்சி குழுவின் முடிவை அவரால் இலகுவாகப் புறக்கணித்துக்கொண்டு கொழும்பு வர முடியுமா என்பது கேள்விதான். அதைவிட, பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன், மனித உரிமை விவகாரங்களில் இலங்கை அரசுக்கு சார்பான கருத்தைக் கொண்டுள்ளவர் அல்ல. அப்படியான நிலையில் இதைச்சாட்டாக வைத்துகொண்டு அவரால், இலகுவில் புறக்கணிப்பு முடிவை எடுத்துவிடமுடியும். அவர் இந்த மாநாட்டைப் புறக்கணிக்கும் முடிவை எடுப்பாரேயானால், அது அடுத்த கொமன்வெல்த் மாநாட்டை கொழும்பில் நடத்துவது பொருத்தமானதா என்ற கேள்வியை வலுவாக எழுப்பும். ஏனென்றால், இந்த கொமன் வெல்த் அமைப்பே பிரித்தானியாவின் முன்னாள் முடியாட்சி நாடுகளின் கூட்டமைப்புத்தான்.

கொமன் வெல்த்பிரித்தானியாவின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாது போனாலும், அந்த மாநாட்டில், பிரித்தானியாவே கதாநாயகன் நிலையில் இருக்கும். தொடர்ந்து மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன, கடந்த கால மீறல்கள் குறித்த நம்பகமான விசாரணைகள் நடத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை இலங்கை எதிர்கொள்வது ஒன்றும் புதியது அல்ல. அவ்வப்போது இந்தக் கருத்து சர்வதேச அளவில் எதிரொலிப்பது வழக்கம்தான். அதுவும் அண்மைக்காலமாகவே சர்வதேச மாநாடுகளில் இந்தக் கருத்து தீவிரமாகவே எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. அதற்கேற்றவாறு இலங்கையில் மனித உரிமை மீறல்களும் அரங்கேறி வருகின்றன.

வெலிக்கடை சிறைப்படு கொலைகள், நீதித்துறை மீதான அரசியல் தலையீடுகள், தாக்குதல்கள், தலைமை நீதியரசா் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்று சர்வதேச அளவில் கண்டனங்களைத் தேடித்தரும் சம்பவங்கள் தான் வரிசையாக நடந்தேறி வருகின்றன. மொமன்வெல்த் மாநாட்டை அம்பாந்தோட்டையில் அடுத்த ஆண்டு நடத்துவதற்கு ஏற்கனவே முடிவு செய்யப்பட்டபோதும், அதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. இந்த மாநாட்டை நடத்துவதில் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொண்டாலோ அல்லது பிரித்தானியா,கன்டா உள்ளிட்ட பல நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டை புறக்கணிக்கும் முடிவை எடுத்தாலோ- அதற்கான பொறுப்பில் இருந்து அரசாங்கத்தினால் நழுவி விடமுடியாது. ஏனென்றால், 2009ஆம் ஆண்டில் போர் முடிந்த சில மாதங்களில், ரினிட்டாட் அன்ட் டுபாகோவில் நடந்த கொமன் வெல்த் உச்சி மாநாட்டில்தான், 2013ஆம் ஆண்டு மாநாட்டை அம்பாந்தோட்டையில் நடத்தும் முடிவு எடுக்கப்பட்டது.

கடுமையான அவலங்களுடன் போர் முடிவுக்கு வந்ததை அறிந்திருந்த போதும், இலங்கைக்கு அந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டது ஒரு நம்பிக்கையின் அடிப்படையில்தான். போருக்குப் பின்னர், இலங்கை அரசாங்கம் எல்லாவற்றையும் சரி செய்துவிடும் என்ற நம்பகத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட அந்த வாய்ப்புத்தான் இப்போது கேள்விக்குள்ளாகியுள்ளது. சர்வதேச சமூகத்தினது நம்பிக்கையையோ, போரினால் பாதிக்கப்பட்டவர்களினது நம்பிக்கையையோ வென்றெடுக்க இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதன் விளைவே இது. மூன்று ஆண்டுகளிலேயே எல்லா நம்பிக்கைகளையும் போட்டுடைத்த பெருமையை சமந்து நிற்கும் அரசாங்கம், அடுத்த கொமன்வெல்த் மாநாட்டை நடத்தும்பொறுப்பைத் தக்கவைப்பதற்கு, கடுமையாகவே போராட வேண்டியிருக்கும் போலவே தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய நோயாளர்களுக்கான ரீ.என்.ரீ. மருந்துக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

இருதய நோயாளர்களுக்கு நாக்கின் அடியில் வைக்கும் ரீ.என்.ரீ. மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுமானால் ஒரு மாதத்துக்குப் போதுமான மருந்தை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ஊடாக வழங்க அரச மருந்துப் பொருள் விநியோகப் பிரிவு தயாராகவுள்ளது.

இதுபற்றி இப்பிரிவின் பணிப்பாளர் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளார். இந்த ரீ.என்.ரீ. மருந்துக்கு தனியார் மருந்தகங்களில் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக உடன் கண்டறியுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன கூறியுள்ளார். இது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் பணித்துள்ளார். தனியார்துறை மருந்தகங்களில் ஏதாவது மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுமானால் அதில் தலையி ட்டு அது பற்றிய காரணங்களை அறிவது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும்.

தட்டுப்பாடு நிலவுமானால் தங்கு தடையின்றி அதனை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதும் அவசியமாகும். அரச மருந்தகங்களில் இந்த மருந்துக்குத் தட்டுப்பாடு இல்லை. ஆறு மாதங்களுக்குப் போதுமான மருந்து அரச மருந்துக் களஞ்சியத்தில் உண்டு.

தனியார் துறையில் இம்மருந்து இல்லையானால் மாதத்துக்கு போதுமான மருந்தை மருந்து விநியோக பிரிவினால் அரச மருந்து பொருட் கூட்டுத்தாபனத்தின் ஊடாக தனியார் மருந்தகங்களுக்கு வழங்க இயலும் என்று பணிப்பாளர் டாக்டர் கமல் ஜயசிங்க தெரிவித்துள்ளார். (2-9)

# கையடக்கத் தொலைபேசி விபரம் அடங்கிய பட்டியல் வெளியீடு

இலங்கையில் முதல்முறையாக கையடக்க தொலைபேசி விபரப்பட்டியலொன்று வெளியிடப்படவுள்ளது. ஏனைய தொலைபேசி விபரப் பட்டியலைப் போன்றே சகல விடயங்களும் இந்த கையடக்கத் தொலைபேசி விபரப்பட்டியலிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அன்ட்ரய்ட் கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்கள் இந்த புதிய திட்டத்தின் மூலம் நன்மை அடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. இத்தொலைபேசி பயன்பாட்டாளர்களுக்கென விசேட மென்பொருளொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த மென்பொருளை பயன்படுத்தி கையடக்கத்தொலைபேசி பட்டியலை பார்வையிட முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (2-9)




★ 1703- இங்கிலாந்து, டெவன் என்ற இடத்தில் உள்ள கலங்கரை விளக்கம் அங்கு நிகழ்ந்த பெரும் சூறாவளியினால் சேதமாக்கப்பட்டது.

★ 1895- ஊர்ஃபா என்ற இடத்தில் 3 ஆயிரம் ஆர்மேனியர்கள் ஓட்டோமான் படைகளினால் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

★ 1895- பாரிசில் அல்பிரட் நோபல் பரிசுக்கான திட்டத்தை தெரிவித்து தனது சொத்துக்களை அப்பரிசுக்கான மூலதனமாக அறிவித்தார்.

★ 1935- இரத்மலானை விமான நிலையத்துக்கு முதலாவது விமானம் மதராசில் இருந்து வந்திறங்கியது.

★ 1940- ருமேனியாவில் இரண்டாம் கரோல் மன்னனின் ஆதரவாளர்கள் 60 பேரை தளபதி இயன் அண்டோனெஸ்கு கைது செய்து தூக்கிலிட்டான்.

★ 1944- இரண்டாம் உலகப் போர்: ஸ்டஃபோர்ட்ஷயரில் ஆங்கிலேய விமானப்படைத் தளத்தின் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட பெரும் விபத்தில் 70 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1964- பனிப்போர்: இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அணுவாயுதச் சோதனைகளை நிறுத்தும்படி ஐக்கிய அமெரிக்காவையும் ரஷ்யாவையும் கேட்டுக் கொண்டார்.

★ 1971- சோவியத்தின் மார்ஸ் 2 விண்கலம் தனது துணை விண்கோள் ஒன்றை செவ்வாய்க் கோளில் இறக்கியது. இது செவ்வாயில் மோதி செயலிழந்தது. செவ்வாயில் இறங்கிய முதலாவது கலம் இதுவாகும்.

★ 1975- கின்னஸ் உலக சாதனை நூலை ஆரம்பித்து வைத்து ரொஸ் மாக்வேர்ட்டர் ஐரிஷ் குடியரசு இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1983- கொலம்பியாவின் போயிங் 747 விமானம் ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட் அருகே வீழ்ந்து நொருங்கியதில் 183 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1999- நியூசிலாந்தின் முதலாவது பெண் பிரதமராக தொழிற் கட்சியைச் சேர்ந்த ஹெலன் கிளார்க் தெரிவு செய்யப்பட்டார்.

★ 2001- ஹபிள் விண்வெளித் தொலைநோக்கி மூலம் ஓசிரிஸ் கோளில் ஆவியாகக் கூடிய நிலையில் ஐதரசன் மண்டலம் கண்டு பிடிக்கப்பட்டது. சூரிய குடும்பத்திற்கு வெளியே உள்ள கோள் ஒன்றில் வளிமண்டலம் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல் தடவை.

★ 2006- கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் மக்களை பெரும்பான்மையாக கொண்ட கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தனியான தேச இனம் என்ற அங்கீகாரத்தை கனேடிய நாடாளுமன்றம் வழங்கியது.

★ 2007- கிளிநொச்சி மாவட்டம் ஜயன் கேணியில் இடம்பெற்ற தாக்குதலில் 9 பாடசாலைச் சிறுமிகள் உட்பட 11 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1934- யோசப் பரராஜசிங்கம், இலங்கை, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் (இ.2005)

★ 1940- புரூஸ் லீ, தற்காப்புக்கலை நிபுணர், நடிகர் (இ.1973)

★ 1942- ஜிமி ஹென்றிக்ஸ் , அமெரிக்க கிட்டார் கலைஞர் (இ.1970)

### இறப்பு

2008- வி.பி.சிங், முன்னாள் இந்தியப் பிரதமர் (பி.1931)

# அணுக் கதிர்வீச்சு பாதுகாப்புக்கு வடக்கில் கட்டமைப்புக்கள்

(கொழும்பு)

வடமாகாணத்தில் அணுக்கதிர்வீச்சு பாதுகாப்பு கட்டமைப்புக்கள் உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அணு உலைகளின் கதிர்வீச்சுக்களினால் இலங்கைக்கு ஏற்படக் கூடிய சுற்றாடல் அனர்த்தங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் நோக்கில் வடமாகாணத்தின் நான்கு இடங்களில் இந்த கட்டமைப்புக்கள் உருவாக்கப்படவுள்ளன.

கல்பிட்டி, தலைமன்னார், நெடுந்தீவு மற்றும் காங்கேசன்துறை ஆகிய பிரதேசங்களில் முதல் கட்டமாக இந்த கட்டமைப்புக்கள் அமைக்கப்படவுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் கொழும்பு, திருகோணமலை, காலி, கண்டி போன்ற இடங்களில் மேலும் இவ்வாறான கட்டமைப்புக்கள் உருவாக்கப்படவுள்ளன. அணுக் கதிர்வீச்சு தாக்கங்களை கண்டறியும் வகையிலான கருவிகள் ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. (அ-9)

# வழங்கப்பட்ட ஆயுதங்களை மீள பெற்றுக் கொள்ள வேண்டாம்

## சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கோரிக்கை

(கொழும்பு)

தமக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டாம் என சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவிடம் கோரியுள்ளனர்.

வெலிக்கடை, மகசீன் உள்ளிட்ட நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளிலும் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்பட்டன. இந்த ஆயுதங்களை பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைத்தால் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படும் என சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலைகளில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் மற்றும் பாதாள உலகக் குழுத் தலைவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஏதேனும் மோதல் நிலைமைகளின் போது அதனைக் கட்டுப்படுத்த ஆயுதங்கள் மிகவும் அவசியமானது என சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆயுதங்களை வழங்குவது பொருத்தமற்றது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். குறிப்பாக ரி -56 ரக துப்பாக்கிகளைப் பயன்படுத்துவது தொடர்பில் போதியளவு அனுபவம் இருக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார். (2-9)

# இந்திய எல்லைக்குள் நுழைந்த இலங்கை மீனவர்கள் கைது

(கொழும்பு)

இந்திய எல்லைக்குள் அனுமதி இன்றி நுழைந்த இலங்கை மீனவர்கள் 10 பேர் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டம் கிருஷ்ணபட்டணம் கடற்கரையில் ரோந்து சென்ற கடற்படை பொலிஸார் அவர்களை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

வங்கக் கடலில் வழக்கமான ரோந்து சோதனையின் போது இவர்கள் பிடிபட்டதாக இந்திய கடற்படை பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடற்படை பொலிஸார் இவர்களை காக்கிநாடா கடற்புற பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவர்களிடம் இருந்து இரண்டு படகுகள், ஆயிரத்து 800 கிலோ சூரை மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச் மாதம் ஐ.நாவின் சிறைக்குள் இலங்கை சிக்குவது திண்ணம்

## அடித்துக்கூறுகிறது தே.ப. தேசிய இயக்கம்

(கொழும்பு)

**அடுத்த வருடம் மார்ச்சில் ஐ.நாவில் இல ங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற் றப்பட்டு அமெரிக்கா தலைமையில் விசா ரணைகள் ஆரம்பிக்கப்படுவது நிச்சயம் என்று தேசப்பறுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.**

சார்ள்ஸ் பெற்றியின் அறிக்கையை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக நிராகரிக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் இது தொடர்பில் மௌனமாக இருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எதிராக ஐ.நா தயாரித்த திரைப்படத்தின் மூன்றாவதும் இறுதியுமான பாகத்தையே ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தற்போது திரையிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் எமக்கெதிராக பிரேரணை கொண்டு வந்திருந்தால் அன்றைய யுத்த வெற்றியுடன் அது தோல்வி கண்டிருக்கும்.

அத்தோடு வெளிநாட்டு தலையீட்டுடன் இலங்கையில் விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியிருக்கும். எனவே ஐ.நா, அமெரிக்கா, இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து திரைப்படத்தை தயாரித்து இரண்டாம் முறை எமக் கெதிராக பிரேரணையை கொண்டு வந்து நிறைவேற்றியது.

பின்னர் ஹெனி மெகாலி குழு இலங்கை வந்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது. எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் எமக்கெதிராகவே அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

அத்தோடு தற்போது ஐ.நா மீது குற்றஞ்சாட்டி சார்ள்ஸ் பெற்றி அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இதுதான் திரைப்படத்தின் மூன்றாவதும் இறுதியுமான பாகமாகும். அத்துடன் இவ்வறிக்கை தாருஸ்மன் அறிக்கையை நியாயப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் சீனா, ரஷ்யா, கியூபா என எமக்கு ஆதரவான நாடுகள் அங்கத்துவத்திலிருந்து வெளியேறுகின்றன. அமெரிக்காவுக்கு ஆதரவான நாடுகளே இக் கூட்டத்தில் பங்குகொள்ளும்.

இதன்போது எமக்கெதிரான பிரேரணையை நிறைவேற்றி சார்ள்ஸ் பெற்றியின் ஐ.நாவுக்கு எதிரான விடயத்தை சுட்டிக்காட்டி ஐ.நாவின் அனுமதியுடன் எமக்கெதிரான விசாரணைகள் அமெரிக்கா தலைமையில் ஆரம்பிக்கப்படுவது நிச்சயம்.

எனவே இவ்வறிக்கையை அரசாங்கம் நிராகரிக்க வேண்டும். அத்துடன் இதற்கெதிராக நாட்டிற்குள் மாபெரும் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆனால் அரசாங்கம் மௌனமாக இருக்கின்றது. இது தொடர்பில் உத்தியோகபூர்வ எதிர்ப்பையும் வெளியிடவில்லை. அரசாங்கத்திடம் நிலையான கொள்கை இல்லை என்றார். (அ-2)

# அரசகரும மொழிக் கொள்கையை மீறுவோருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

அரச கரும மொழிக் கொள்கையை உரிய முறையில் கடைப்பிடிக்காத அரச நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ள தாக அரசகரும மொழிகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரச கரும மொழிக்கொள்கையை மீறியுள்ள 75 அரச நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் ஏனைய அரச நிறுவனங்கள் பற்றிய தகவல்களை திரட்டி வருவதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர்.ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசியல் ரீதியாக செல்வாக்கு மிக்க அமைச்சுக்களுக்கு குறிப்பாக ஜனாதிபதிக்கு உட்பட்ட அமைச்சுக்களின் அரச நிறுவனங்களுக்கு எதிராக இந்த விவகாரத்தில் சட்டநடவடிக்கை எடுப்பது என்பது நடைமுறையில் கேள்விக்குறியே என்று அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் என்.பி.எம். சைஃப்டீன் தெரிவித்தார்.

அரச கரும மொழிக்கொள்கையை மீறும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றம் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்க முடியும் என்கின்ற அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இருக்கின்ற போதிலும் 2010 ஆம் ஆண்டு வரையான தனது 10 ஆண்டுகால பதவிக்காலத்தில் தமக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் குறித்து எந்தவொரு வழக்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# எம்.பி.அல்லாத ஒருவருக்கு எவ்வாறு நிதியொதுக்கலாம்?

## ஜனாதிபதியை சாடினார் சுமந்திரன்

(கொழும்பு)

நாடாளுமன்ற நிதிவிவகாரங்களுக்கு பொறுப்பு கூறவேண்டும். எனினும் 2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவருக்கு 66 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நிதி விவகாரங்களுக்கு நாடாளுமன்றமே பொறுப்பு கூறவேண்டும் எம்.பி. அல்லாத ஒருவருக்கு நாடாளுமன்றத்திற்கு பொறுப்பு கூற முடியாது. 2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் நிதி பாதுகாப்பு துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகிய மூன்று அமைச்சுக்களுக்கே 66 சதவீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த அமைச்சுக்கள் ஜனாதிபதியின் கீழ் இருக்கின்றது. ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர் அல்ல. அவரினால் நாடாளுமன்றத்திற்கு பொறுப்பு கூறவே முடியாது. ஏனெனில் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் அல்ல. அவரின் கீழுள்ள அமைச்சுக்கே மொத்த செலவில் 66 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.


இது நாடாளுமன்றத்தின் பலத்தை குறைப்பதற்கான நடவடிக்கையாகும். சட்டவாக்கத்துறையையும் நிறைவேற்று அதிகாரத்திற்குள் கொண்டு வந்து நீதித்துறையையும் கையிலெடுக்கும் ஏகாதிபத்திய முறைகேடாகும் என்றார். (அ-2)


# பேருந்துகள் மோதியதில் 14 பேர் காயமடைந்தனர்

(கொழும்பு)

கிரிந்திவெல தித்தபத்தர பகுதியில் இரு பேருந்துகள் ஒன்றுடனொன்று மோதி விபத்திற்குள்ளானதில் சுமார் 14 பேர் காயமடைந்துள்ளனர். இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இரண்டு தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களை ஏற்றிக் கொண்டு வந்த இரண்டு பேருந்துகளே இவ்வாறு மோதி விபத்திற்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-2)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரால் அண்மையில் யா/அல்லாரை அரசினர் மகா வித்தியாலயத்தில் டெங்கு நோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கினை பொதுச்சுகாதார பரிசோதகர் ஆ.யென்சன் றொனால்ட் விளக்கமளிப்பதையும் அருகில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழக தலைவர் லயன் கே.நடராசா, செயலாளர் டாக்டர் லயன் ஆர்.கந்தையா, உறுப்பினர் லயன். சீமாட்டி, அ.சறோசாதேவி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இரு நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

(கொழும்பு)

காசல்ரீ மற்றும் விமலசுரேந்திர நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. மலையகத்தில் பெய்த அதிகளவான மழை காரணமாக நேற்று முன்தினம் மேற்படி நீர்த் தேக்கங்களின் நீர் மட்டங்கள் அதிகரித்துள்ளன. இதனால் அவற்றின் வான்கதவுகள் திறக் கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித் துள்ளது.

மேலும் நீரை வெளியேற்றும் கதவுகள் திறக்கப்பட்டதனால் களனி ஆற்றின் நீர் மட்டம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாகவும் அதனால் ஆற்றை பயன்படுத்துபவர்கள் மிக அவதா னத்துடன் செயற்படுமாறும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனை அடையும் வழியைப் புலப்படுத்தும்

# கார்த்திகைத் தீபம்

சைவ அன்பர்களின் பிரதான மாதங்களில் கார்த்திகை மாதம் ஒன்றாகும். கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று கார்த்திகை நட்சத்திரம் வருவதனால் இம்மாதம் கார்த்திகை என அழைக்கப்படுகிறது.

திருமாலுக்கும் பிரமனுக்கும் யார் பெரியவர் என்ற விவாதம் புராணம் கூறும் கதையாகும். சிவன் ஜோதியாகத் தோன்ற அடியையும் முடியையும் தேடி முறையே விஸ்ணுவும் பிரமாவும் சென்றனர்.

விஸ்ணு தோல்வியை ஒத்துக்கொண்டு திரும்பினார். ஆனால் பிரம்மாவினால் தோல்வியை ஒத்துக்கொள்ள முடியவில்லை. ஜோதியின் முடியிலிருந்து உதிர்ந்து விழுந்த தாழம்பூவை சாட்சியாக்கவும் முயன்றார். அதனால் பொய் சாட்சி கூறிய தாழம்பூ பூசைக்கு உதவாத பூவாகியது.


பிரம்மாவுக்கு தனி ஆலயம் அமையவில்லை என்பது வரலாறு. இவ்வாறு பரம்பொருள் ஜோதியாகத் தோன்றிய தினம கார்த்திகைத் தீபமாகக் கொண்டாடப்படுகின்றது. ஜோதி மலையாகத் தோன்றிய சிவன் அண்ணாமலை என்று அழைக்கப்பட்டார். அகந்தை அழிந்த தினம் கார்த்திகைத் தீப தினமாகும்.

புராணம் கூறும் இக்கதையில் ஆழ்ந்த உட்பொருள் உண்டு. இறைவன் - பரம்பொருளைக் காணப் புறப்பட்டவர்கள் விஸ்ணு, பிரம்மா ஆகியோர். இதில் விஸ்ணு மகாலட்சுமியின் கணவன், செல்வத்திற்கு அதிபதி. பிரம்மா சரஸ்வதியின் நாயகன் கல்விக்குரியவர். இக்கதையில் அடியையும் முடியையும் தேடிச் சென்றது செல்வமும் கல்வியுமாகும். இரண்டினாலும் நோக்கத்தை அடைய முடியவில்லை இதிலிருந்து செல்வம், கல்வி மூலம் அறியப்பட முடியாதது பரம்பொருள் எனும் உண்மை விளக்கப்படுகிறது. ஆணவம் என்ற இருள் அகன்று உண்மையான பக்தி ஒன்றினால் மட்டுமே இறைவனை அடைய முடியும் எனும் பேருண்மை புலப்படுகிறது. செலவு செய்து ஆலயம் அமைத்தாலும் நூல் பல கற்றாலும் காண முடியாத பரம்பொருளை உள்ளத்தில் - புந்தியில் வைத்து நினைப்பவர்க்கு ஜோதியாக பரம்பொருள் தோன்றும் நாள் கார்த்திகைத் தீபத் தினமாகும்.

இவ்வாண்டு கார்த்திகைத் தீபம் நவம்பர் 27 ஆம் திகதி வருகிறது. எமது நாட்டில் நவம்பர் 27 இற்கு வேறு கதை உண்டல்லவா! எனவே இவ்வாண்டு விளக்குகள் ஏற்றும் தினத்தன்று எந்த விதமான அசம்பாவிதமும் நிகழாதவாறு முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

கார்த்திகைத் தீபம் மனதின் இருளையும் தமிழ் மக்களின் வாழ்வின் இருளையும் நீக்கும் புண்ணிய தினமாக அமையட்டும்.

'சொல்லின் செல்வர்',இரா. செல்வவடிவேல்



# தீபத் திருநாள் கேலிக் கூத்தல்ல

பிரம்மாவும் திருமாலும் ஒரு காலத்தில் தாமே பிரம்மம் என்று அகங்காரம் கொண்டு பெரும் யுத்தம் செய்த நிலையில் முழுமுதற் கடவுளாம் சிவபெருமான் மண்ணிலிருந்து விண் வரைக்கும் பெரியதோர் சோதி வடிவாகி நின்று இச் சோதியின் அடிமுடியைக் காண்பவர் யாரோ அவர்தான் பெரியவர் என்று அசரீரியாகக் கூறினார்.

திருமால் பன்றியாகப் பூமியை ஊடறுத்துக் கொண்டு சோதி வடிவத்தின் அடியைத் தேடலானார். பிரம்மா அன்னப் பறவையாய் சோதியின் முடியைத் தேடி ஆகாய மார்க்கமாகப் பறந்தார். பல காலமாக முயற்சித்தும் அடிமுடி காணாது இவர்கள் கலங்கி நிற்க சிவபெருமான் சோதி வடிவத்தை ஒடுக்கி இங்கு உற்றேன் என லிங்கமாகத் தோன்றினார்.

சோதி வடிவாகத் தோன்றிய சிவனுடைய வடிவத்தை நினைந்து தீபங்களேற்றி வழிபடுவதே கார்த்திகைத் தீபத் திருநாளாகும்.

### திருமுறை ஓதி வழிபடுதல்

சைவத் திருமுறைகள் பல இடங்களில் சோதி வடிவம் தொடர்பாகப் பாடப்பட்டுள்ளது. இந்தத் திருநாளில் நாம் எங்கும் சுட்டி விளக்குகளை அலங்காரமாக வைத்தும் தீபங்கள் ஏற்றியும் மகிழ்கின்றோம். ஆனால் எத்தனைபேர் அன்று மனக்கண் முன் சிவனைச் சோதி வடிவமாக எண்ணி மனதார வழிபடுகின்றார்கள் என்பது கேள்விக்குறியே.

எமது சுவாமியறைகளில் சோதி வடிவம் தொடர்பான திருமுறைகளை ஓதி வழிபாடு செய்யலாம். திருவெண்ணாமலையிலேயே சிவபெருமானின் சோதி வடிவம் தோன்றிய காரணத்தால் இத் தீபவிழா திருவெண்ணாமலையில் சிறப்பாகக் கொண்டாடப்படுவதால் 'பூவார் மலர் கொண்டடியார்..' எனத் தொடங்கும் திருவெண்ணாமலைப் பதிகம் ஓதி வழிபடுவது மிகவும் சிறப்பானதாகும். 'சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி', 'பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி ...' செங்கணானும் பிரமனும் தம்முள்ளே ...' ஆகிய தேவராங்களை ஓதியும் ' சோதியோ சுடரே...' ' அலரவனும் மாலயனும் அறியாமே....' ஆகிய திருவாசகங்களை ஓதியும் 'அன்னமாய் விசும்பு பறந்து அயன்தேட...' எனும் திருவிசைப்பாவை ஓதியும் ' புரந்தரன் மாலயன் பூசலிட்டு...' எனும் பல்லாண்டு ஓதியும் ' ஆதியாய் நடுவுமாகி...' எனும் பெரிய புராணத்தை ஓதியும் அருமைத் தமிழ் அர்ச்சனை செய்து வழிபட்டு இன்புறலாம்.

### கேலிக் கூத்தாகும் நிலை

தற்காலத்தில் வீதிகளின் சந்திகள் தோறும் சில ஆலய வீதிகளிலும் ரயர்களை எரிப்பதும் சைக்கிள் ரயர்களைக் கொளுத்தி கைகளில் ஏந்திச் சென்று கூத்தாடுவதுமாக தீபத் திருநாளைக் கொச்சைப்படுத்துகிறார்கள். பாடசாலை மாணவர்கள்கூட இதனைச் செய்கிறார்கள். இவ்வாறு செய்பவர்கள் தெய்வ நிந்தனை செய்து பாவத்திற்கு உள்ளாகிறார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்காக பாடசாலை அதிபர்கள் தீபத் திருநாளன்று காலைப் பிரார்த்தனையின் போது மாணவர்களுக்கு ரயர் எரித்தல் போன்ற இழிவான செயல்களைச் செய்ய வேண்டாமென அறிவுரை கூறவேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இவ்வாறு செய்ய விடாமல் தடுக்க முடியும். பெரியோர்களும் ஆலய அறங்காவலர்களும் குருமார்களும் சம்பந்தப்பட்டவர்களுக்கு புத்தி புகட்டித் தடுக்க முடியும். இது விடயத்தில் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

கெ.தவராசா, இணுவில்.

# பன்றி இறைச்சி பரிமாறப்பட்டால் முஸ்லிம் எம்.பிக்கள் பகிஷ்கரிப்பர்

## எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் பன்றி இறைச்சிக்கறி பரிமாறப்பட்டால் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிற்றுண்டிச்சாலையை பகிஷ்கரிப்பர் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திக்கும் இடமே சிற்றுண்டிச்சாலையாகும். இங்கு பன்றி இறைச்சிக்கறி பரிமாறப்பட்டால் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிற்றுண்டிச்சாலையை பகிஷ்கரிப்பர்.

பன்றி இறைச்சியினால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் அனுமதிக்கவேண்டும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்க எம்.பி. சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை வியப்படையச் செய்துள்ளது.

முஸ்லிம்களைப் புண்படுத்தும் செயல்களில் ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்து ஈடுபடுகின்றது. அதன் ஒரு அங்கமே இதுவாகும்.

முஸ்லிம்கள் உண்பதற்கு தடை செய்யப்பட்டுள்ள பன்றி இறைச்சியினை நாடாளுமன்றத்தில் அனுமதிக்கவேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளமை இலங்கையிலுள்ள முஸ்லிம்களை அவமதிக்கும் செயலாகும்.

நாடு சுதந்திரம் அடைந்தது முதல் இன்று வரை பன்றி இறைச்சி நாடாளுமன்றத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை பன்றி இறைச்சியினால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலைக்குள் அனுமதிக்க வேண்டாம் எனக்கோரி அமைச்சர்களான ஏ.எச்.எம்.பௌசி, ரவூப் ஹக்கீம், றிசாட் பதியுதீன் மற்றும் அதாவுல்லா உட்பட அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டு சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர். (அ-2)

# கணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை தினமும் காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 9.30 மணிவரை இலட்சார்ச்சனை கணபதி ஹோமம் என்பன நடைபெறவுள்ளன.

அத்துடன் தினமும் முற்பகல் 9.30 மணிக்கு விநாயகர் புராணம் ஓதுதலும் நடைபெறும். 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு மஹாபூர்ணாகுதி சங்காபிஷேகம், பஞ்சமுகர் திருவீதி அருட்பவனி என்பன நடைபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (அ-9)

# ஜனாதிபதி தங்கக் கிண்ணம் மட்டுவில் ஐங்கரன் அணிக்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கு இடையில் நடைபெற்ற ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்ட போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணி வெற்றிபெற்று தென்மராட்சி பிரதேசமட்ட சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டதுடன் மாவட்ட மட்டப் போட்டிக்கும் தெரிவாகியுள்ளது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியை எதிர்த்து கைதடி குமரன் அணி களமிறங்கியது.

இதில் 25:16, 25:16, 25: 18 என்ற மூன்று செற் கணக்கில் மட்டுவில் ஐங்கரன் அணி வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

டயலொக் ஜி.எஸ்.எம் அனுசரணையுடன் நடைபெறும் பிரதேச மட்ட போட்டிகள் நிறைவடைந்ததும் மாவட்ட மட்டப்போட்டிகள் நடைபெறும் எனவும் பிரதேச மட்டத்தில் வெற்றிபெற்ற அணிகள் மாவட்ட மட்டப்போட்டிகளுக்கு தம்மை தயார்படுத்துமாறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-3-29)

# ஆஸி. செல்ல முனைகின்றவர்களில் 40 வீதமானோர் இலங்கையர்கள்

## ஆஸி. பாதுகாப்பு அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

அகதி அந்தஸ்தை எதிர்பார்த்து சட்டவிரோதமாக கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்கு வரும் நபர்களில் 40 வீதமானவர்கள் இலங்கையர்கள் என அந்த நாட்டின் எல்லைப் பாதுகாப்புப் படையின் தலைமை அதிகாரி ரியர் அட்மிரல் டேவிட் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்குப் பயணிக்கும் இலங்கையர்கள் தொடர்பாக இலங்கை அவுஸ்திரேலிய தூதரகம் சினமன் கிரேண்ட் விடுதியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கையிலிருந்து கடல்வழியாக சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்வோரை தடுக்க இலங்கை கடற்படையினர் எடுத்துவரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கது.

அவுஸ்திரேலிய கடற்படையினர் இலங்கை கடற்படையினரிடம் இருந்து பலவற்றை கற்று வருகின்றனர்.

இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆட்கடத்தல் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்கு பணத்தைக்கொடுத்து அகதி அந்தஸ்தை எதிர்பார்த்து உயிரைப் பணயம் வைத்து அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதால் எந்தப் பயனும் எற்படப்போவதில்லை. இவ்வாறு செல்பவர்கள் கைது செய்யப்பட்டு மீண்டும் அவர்களின் நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் எனவும் ஜோன்சன் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கெதிரான விசாரணையை வெற்றிகரமாக எதிர்கொள்வேன்

## பிரதம நீதியரசர் உறுதி

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை என பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அரசியல்வாதிகள் தம்மை விசாரணைக்கு உட்படுத்துவது சட்டத்திற்கு புறம்பானது.

தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முறியடித்து விசாரணைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த விசாரணை நடத்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு அதிகாரம் கிடையாது. அரசியல் சார்பற்ற சுயாதீனமான தரப்பினரிடம் இந்த விசாரணைகள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

நீதி விசாரணை நடத்தும் அதிகாரம் பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு கிடையாது. தமக்கு எதிரான 14 குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் அச்சமின்றி விளக்கமளிப்பேன் என்றார். (அ-2)

# பாடசாலைகளை இன ரீதியாக பிரிப்பதை நிறுத்துங்கள்

## அமைச்சர் வாசுதேவ வலியுறுத்தல்

(கொழும்பு)

சிங்களம், தமிழ், முஸ்லிம் என பாடசாலைகள் பிரிக்கப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பல மொழி அறிவுடன் சகோதர இனங்களுடன் ஐக்கியத்தை ஏற்படுத்தும் பணிகளை பாடசாலைகளில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்பதால் பாடசாலைகளை இன ரீதியாக பிரிக்கக் கூடாது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு ஒன்றின் இருப்புக்கு நல்லிணக்கம் என்பது முக்கியமானது. மூன்று மொழிகளில் பணியாற்றுவதன் மூலம் இந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இலங்கையின் பிரதான மொழிகள் சிங்களமும் தமிழுமாகும். இந்த இரண்டு மொழிகளை கற்பதன் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டை கட்டியெழுப்ப முடியும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை மீண்டும் ஒருங்கிணைக்க முனைப்பு

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

நீதிமன்ற உத்தரவின் பேரில் பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீண்டும் ஒருங்கிணைக்கும் அவதானம் உருவாகியுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

புலி இனவாத சக்திகளும் பிரிவினைவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் சில அமைப்புக்களும் சில மேற்குலக நாடுகளும் ஒருங்கிணைந்து இது தொடர்பாக சூட்சுமமான வேலைத்திட்டத்தில் ஈடுபட்டு இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பால் நாட்டை பிரிக்கும் சதியை முறியடிப்போம் என்ற தலைப்பில் ஒருங்கிணைந்த முச்சக்கர வாகனச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் பங்கேற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திவிநெகும சட்டத்துக்கு வழங்கப்பட்ட வழக்கு தீர்ப்பை பார்க்கும் போதும் இதற்கு முன் பல சட்டங்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்களை பார்க்கும் போதும் பாராளுமன்றத்தின் செயற்பாடு நாளுக்கு நாள் பலவீனம் அடைவது தெளிவாகியது.

ஒரு சட்டமூலத்துக்கு மாகாணமொன்று எதிர்ப்பு என்றால் அந்த மாகாணத்துக்குரிய சட்டத்தை அங்கீகரிக்க முடியாமல் பாராளுமன்றம் அப்பாவி தன்மை அடைவது தெளிவாகிறது. பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டங்கள் அன்று பிரபாகரனின் ஆயுத பலத்துக்கு பயந்து வடகிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பாராளுமன்றத்தின் சட்டங்களை தமக்கு விருப்பமான மாகாணங்களில் நடைமுறைப்படுத்துவதை தவிர்ப்பதற்கு இன்று தமிழ் பிரிவினைவாத சக்திகளுக்கு இயலுமாகி உள்ளது.

பாரர்ளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்களை வடக்கில் நிறைவேற்ற எமக்கு இயலுமாக இருக்க வேண்டும்.

பாராளுமன்ற பெரும்பான்மையால் நிறைவேற்றப்படும் சட்டத்தை வடக்கில் நடைமுறைப்படுத்த முடியாதென்றால் அதற்கு மூன்றில் இரண்டு அதிகாரம் வேண்டும் என்பது பாதுகாப்பு படையினர் வெற்றியைக் கொச்சைப்படுத்துவதாக அமையும்.

யுத்த வெற்றியுடன் அரசியல் வெற்றியும் முழுமையாகக் கிடைத்தால் பாராளுமன்றத்தில் முழு நாட்டுக்கும் ஏதுவான வகையில் சட்டத்தை பிறப்பிக்க வேண்டும். அதற்கு இன்று முடியாதுள்ளது.

ஆகவே நாட்டைப் பாதுகாக்க வலுவூட்டுவதே எமது பொறுப்பாகும். எனவே, நாம் எல்லோரும் ஒன்றுபட்டு இந்தச் சவாலை வெற்றி கொள்வோம் என்றார். (அ-2)

# ஸ்ரீ முருகன் அணியை எதிர்த்து இளைஞர் அணி மோதுகிறது




(கரவெட்டி)

வடமராட்சி குரும்பசிட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கெட் இறுதிப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் கழகத் தலைவர் எஸ்.ஜெனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபர் அ.அரியரட்ணம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இவ்விறுதியாட்டங்களில் 5 ஓவர் கொண்ட போட்டியில் கரவெட்டி ஐங்கரா அணியை எதிர்த்து அல்வாய் நியூபவர் அணியும் 10 ஓவர் கொண்ட போட்டியில் வதிரி ஸ்ரீமுருகன் அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் அணி மோதவுள்ளது. 10 ஓவர் கொண்ட சலஞ்சர் போட்டியில் குரும்பசிட்டி உதயசூரியன் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதவுள்ளது. (அ-3-24)

# பௌர்ணமி தின கருத்தாடல்

(பூந்தோட்டம்)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் இம்முறை நடத்தும் பௌர்ணமி தின கருத்தாடல் நிகழ்வில் கவியரசு கண்ணதாசனின் திரை இசைப்பாடல்கள் எனும் கருத்தாடல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாஸன் கவியரசு கண்ணதாசனின் திரை இசைப்பாடல்கள் எனும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். (அ-9-266)

# கொழும்பு தமிழ்ச்சங்க ஒழுங்கை பெயர்சூட்டு விழா தடைப்பட்டது

## மனோ கணேசன் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தை 57 ஆம் ஒழுங்கைக்கு கொழும்பு தமிழ்ச்சங்கம் ஒழுங்கை என்ற பெயரை சூட்ட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் சட்டப்படி எடுக்கப்பட்ட முயற்சி இறுதி நேரத்தில் ஆளுகின்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மேல்மாகாணசபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தனது முன்னைய எழுத்துமூல அனுமதியை வாபஸ் வாங்கி கொண்டதால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணித்தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்த தெரிவித்த அவர்,

நமது கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் மாநகரசபை உறுப்பினர் வேலணை வேணியனின் முன் முயற்சியால் இந்த நிகழ்வு நடைபெறவிருந்தது. இது தற்சமயம் தடை செய்யப்பட்டமை சம்பந்தமாக எந்தவித எதிர்ப்பு நடவடிக்கைகளையும் இதுவரை மேற்கொள்ளாமல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் வேண்டுகோளின் பேரில் நாம் பொறுமை காத்து வருகிறோம்.

இந்த வார முடிவுக்குள் இது தொடர்பான ஒரு கலந்துரையாடலை சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் நடத்தி தீர்வு காண்பதாக அவர் எனக்கு உறுதி அளித்துள்ளார். இந்து கோவில்களை உடைப்பதையும் முஸ்லிம பள்ளிவாசல்களை இடிப்பதையும் கிறிஸ்தவ ஆலயங்களை முடக்குவதையும் ஆளுகின்ற அரசாங்க அமைச்சர்களும் எம்.பிக்களும் கடுமையாக கண்டித்து அறிக்கை அரசியல் செய்வது மிகப்பெரும் வேடிக்கையாகும். எதிர்க்கட்சிகளான நாம் எதிர்ப்பதையும் போராட்டங்களையும் பார்த்துக் கொள்கிறோம். அரசாங்கத்துக்குள் சகல சௌபாக்கியங்களுடன் இருக்கும் நீங்கள் எங்களது எதிர்ப்பை எடுத்துக்காட்டியாவது இத்தகைய அநீதிகளை தடுத்துநிறுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரசபையில் அனைத்து கட்சி ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானமே வெள்ளவத்தை 57 ஆம் ஒழுங்கையின். பெயர் கொழும்பு தமிழ்ச்சங்கம் ஒழுங்கை என மாற்றப்படுவதாகும். இது சகல மாநகரசபை உறுப்பினர்களின் ஆதரவுடன் எமது கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் வேலணைவேணியனின் முன்முயற்சியாகும்.

இது சம்பந்தமாக சட்டப்படி மேல்மாகாண முதலமைச்சர், ஆளுநர் ஆகியோரது அனுமதிகள் பெறப்பட்டுள்ளன. பொதுமக்கள் ஆட்சேபனைகள் இருப்பின் தெரிவிக்க காலக்கெடுவும் வழங்கப்பட்டு இறுதியில் எந்தவித ஆட்சேபனைகளும் இல்லாத நிலையில் அதிகாரபூர்வ அரசாங்க வர்த்தமானியிலும் அது பிரசுரிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பான பெயர்சூட்டுவிழா ஆளும்கட்சி, எதிர்க்கட்சி பிரமுகர்களின் பங்குபற்றலுடன் அரசியல் கட்சி பேதங்கள் இல்லாமல் நடைபெற இருந்தது. இந்நிலையில் தான் கடந்த வெள்ளிக்கிழமை ஆளுகின்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மேல்மாகாணசபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தனது முன்னைய எழுத்துமூல அனுமதியை வாபஸ் வாங்கி கொண்டதால் இந்த விழா நடைபெறுவது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, இது சம்பந்தமாக இந்த பெயர்சூட்டும் பணியினை முன்னெடுத்த எமக்கு எவரும் விளக்கம் தர தேவையில்லை. நடந்த சம்பவங்களுக்கு ஆளும் அரசாங்க தமிழ், சிங்கள பிரமுகர்கள் கவலை தெரிவிப்பதை விட நடைபெற்றுள்ள இந்த இனவாத போக்கை தமது அரசாங்கத்துக்குள் எடுத்துக்கூறி தீர்வு காண உதவ வேண்டும்.

இது நடைபெறாவிட்டால் எதிர்க்கட்சி என்ற முறையில் நாம் தேசிய சர்வதேச ரீதியாக இந்த பிரச்சினையை முன்னெடுப்போம். இதை எப்படி முன்னெடுப்பது என எனக்கு மிக சிறப்பாகவே தெரியும்.

பள்ளிகள் இடிக்கப்பட்டாலும் கோவில்கள் உடைக்கப்பட்டாலும் இவர்களும் சேர்ந்து கண்டிக்கிறார்கள். ஆனால், ஜனாதிபதியின் முன் இவர்கள் இவற்றைப்பற்றி எடுத்து கூறுவது இல்லை என இவர்களின் அரசாங்க கூட்டணி தலைவரான ஜனாதிபதியே பகிரங்கமாக கூறியுள்ளார்.

எனவே, கண்டன அறிக்கை அரசியலை நிறுத்திவிட்டு இதைப்பற்றி ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்து தீர்வு காண உதவும் படி நான் சம்பந்தப்பட்ட அனைத்து ஆளுங்கட்சி அரசியல்வாதிகளுக்கும் விடுக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத்தானே ஆட்சி செலுத்தாதவர்களை மற்றவர்கள் ஆட்சி செய்வார்கள்.

–இக்பால்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நீங்கள் நெஞ்சுக்கு நீதியான பற்றாளர்கள் உங்களுக்கு பூரணையும் தீபம் ஏற்றும்

மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றவர்கள்... என்பது போர்க் காலப் பாடல்.

நம்மைப் பொறுத்தவரை மண்பற்றோடு, தூய சிந்தனையோடு தங்கள் உயிரை மண்ணிற்கு தியாகம் செய்த அத்தனை பேரும் மாவீரர்களே!

அந்தவகையில் மண்மீட்பு, தமிழ் மானம் காப்பு என்ற நோக்கோடு களமாடி தம் குருதியை தமிழ் மண்ணில் சிந்தி உடலை உரமாக்கிய அத்தனைபேரும் மாவீரர்கள் மட்டுமின்றி அவர்கள் மகாதியாகிகளும் கூட.

மற்றவர்கள் வாழவேண்டும் என்பதற்காக தம் வாழ்வை தியாகம் செய்வது என்பது சாதாரண விடயம் அன்று.

இத்தகைய தியாக சிந்தனைகள் தமிழ் இனத்தில் மட்டுமல்ல சிங்கள இனத்தில் இருந்தாலும் அவர்களுக்குரிய கௌரவம்–மரியாதை கொடுக்கப்பட வேண்டும். ஆனாலும் எங்கள் மண்ணில் மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டமை எல்லாள மன்னனுக்கு கௌரவம் செலுத்திய துட்டகைமுனுவின் வழிவந்த பரம்பரை செய்த மகா தவறு.

போர்வீரர் எவராக இருந்தாலும் அவரின் அந்திமத்தில் கௌரவம் கொடுக்கப்படுவது என்ற கலாசாரம் மனிதத்தின் சிறப்பாகக் கருதப்பட்டதாயினும் சிறப்புக்களை இனத்தால் சிதறடிக்கும் ஆட்சியில் எதற்குமே மரியாதை இல்லாது போய்விட்டது. மாவீரர் துயிலும் இல்லங்களை மாவீரர்களின் இருப்பிடமாகக் கருதாமல் இறந்தவர்களை அடக்கம் செய்யும் மயானம் என்று கருதியிருந்தால் –ஒவ்வொரு பேழைக்குமான உறவுகள் தங்கள் நினைவஞ்சலியைச் செலுத்த அவை தேவையானவை என்று நினைத்திருந்தால் கூட துயிலும் இல்லங்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

என்ன செய்வது! கோபமும் இனவாதமும் எல்லாவற்றையும் தூக்கிக் கொட்டி சிதறடித்து விட்டன.

பரவாயில்லை! அரசும் ஆட்சியதிகாரமும் தடுத்தாலும் தியாகத்திற்கு மதிப்பளிக்க, இயற்கை தவறுவதில்லை என்ற உண்மை உணர்த்தப்படுகின்றது.

ஆம்! மாவீரர் நாளும் கார்த்திகை பௌர்ணமியும் ஒன்றாகிக் கலந்துகொண்டன.

கூடவே புத்த பிரானின் புனித நாளும் அதுவாகிக் கொள்கிறது.

நாங்கள் எத்தனை தடைகள் போட்டு தடுக்க நினைத்தாலும் இயற்கை தன்பாட்டில் பலவற்றைச் செய்து முடிக்கின்றது என்ற உண்மை ஒவ்வொரு மனிதர்களாலும் உணரப்பட வேண்டும்.

இந்த உணர்தல் என்பதற்குள் இன, மத வேறுபாடுகள் இருத்தலாகாது.

எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் என்று தங்களைக் காட்டிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு இம்மியும் துரோகம் இழைக்கலாகாது.

இதனை பூரணையும் தீபம் ஏற்றுகின்ற மாவீரர் நாளில் சம்பந்தர் ஐயா தானும் சத்தியம் செய்து தான் சார்ந்தவர்களுக்கும் சத்தியப் பிரமாணம் செய்து வைக்க வேண்டும்.

# யாழ்.கோட்டை புனரமைப்பு 2013 டிசெம்பரில் பூர்த்தியாகும்

## தொல்லியல் திணைக்களம் தெரிவிப்பு

2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திற்குள் யாழ்ப்பாணம் கோட்டை புனரமைப்புப் பணி பூர்த்தியாக்கப்படும் என தொல்லியல் திணைக்களத்தின் வட பிராந்திய உதவிப் பணிப்பாளர் சோமதிலக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் நெதர்லாந்து அரசாங்கத்தின் 104 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டுவரும் யாழ்ப்பாணத்திலுள்ள ஒல்லாந்தர் காலத்துக்குரிய கோட்டையின் புனரமைப்புப் பணி தற்போது 80 வீதம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் 104 மில்லியன் ரூபாயில் 87 மில்லியன் ரூபா இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை 104 மில்லியன் ரூபா நிதிப் புனரமைப்புப் பணியை முழுமையாக மேற்கொள்ள போதுமானதாக இல்லை எனவும் இதனால் மேலும் 50 மில்லியன் ரூபாய் நிதியை வழங்குமாறு இருநாட்டிடமும் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த கோட்டைப் புனரமைப்புப் பணியில் இலங்கை அரசாங்கமும் நெதர்லாந்து அரசாங்கமும் அதிகளவில் ஆர்வம் காட்டி வருவதாகவும் தெரிவித்த அவர் அடுத்த வருடம் டிசெம்பர் மாதத்திற்குள் கோட்டைப் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாக்கப்படும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கோட்டை தற்போது சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் கவர்ந்து வருவதுடன் அதிக எண்ணிக்கையான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் வந்து பார்வையிடுவதும் குறிப்பிடத்தக்கது. (அ–6)

# பண்பாட்டு மண்டபக் காணியை பயனுள்ள வகையில் மாற்றுங்கள்

## கிளிநொச்சி மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி டிப்போ சந்திக்கருமையில் உள்ள பண்பாட்டு மண்டபக் காணி பயனற்றுக் காணப்படுவதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த கால யுத்த சூழலின் பின்னர் மீளக் குடியேறிய கிளிநொச்சிப் பிரதேசத்தில் பொது நூலகம், சிறுவர் பூங்கா, கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம், வர்த்தக சங்கம், கிளி.மாவட்ட கைத்தொழில் வேளாண் ஒன்றியம், பேருந்து நிலையம்;மற்றும் பண்பாட்டு மண்டபம் ஆகியவற்றை அமைப்பதற்கு காணி இல்லாப் பிரச்சினை காணப்படுவது அனைவரும் அறிந்து கொண்ட ஒரு விடயமாகும்.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் நல்லெண்ணத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்படி பயனற்றுக் காணப்படும் பண்பாட்டு மண்டபக் காணியில் ஏதாவது ஒரு பயனுள்ள கட்டிடத்தை அமைத்து மக்கள் பாவனைக்கு தருமாறு கிளிநொச்சி மாவட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்துடன் தாம் அனைவரும் கரைச்சி பிரதேச கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்துடன் இணைந்து அண்மையில்கரைச்சிப்பிரதேசசெயலரிடம் தமக்குகாணிதேவையெனகோரியிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.(ந–9)

# மலையக தமிழ் பெண்கள் அரபு நாடுகளில் விற்பனை

## விசாரணைக்கு கோருகிறது ம.ம.முன்னணி

மலையகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்களை சவுதி அரேபியாவுக்கு அனுப்பி வைப்பதாக கூறி வேறு அரபு நாடுகளுக்கு அனுப்பி வைக்கும் திட்டமிட்ட வியாபாரம் குறித்து உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு மலையக மக்கள் முன்னணி சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளது

கொழும்பில் இயங்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்று ஹட்டன் பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவரை சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது. ஒரு வாரம் சவுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த பெண் மற்றுமொரு பிரதி முகவர் மூலம் ஜோர்தானுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் எனவும் மலையக மக்கள் முன்னணி கூறியுள்ளது.

சவூதி அரேபியாவுக்கு பெண்களை வீட்டு வேலைகளுக்கு அனுப்பி வைக்கும் அனுமதிப்பத்திரங்களை கொண்டுள்ள முகவர் நிலையங்கள் வேறு நாடுகளுக்கு பெண்களை அனுப்பி வைக்கும் அதிகாரம் உள்ளதா என மலையக மக்கள் முன்னணியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் அரவிந்த குமார் கேள்வி எழுப்பியுள்ளார். (அ–2)

# கடத்தல் அராஜகங்களை கண்டிக்கிறது தமிழரசுக் கட்சி

(யாழ்ப்பாணம்)

கடந்த வார முற்பகுதியில் வேலணையைச் சேர்ந்த சதாசிவம் யோகீஸ்வரன் என்பவர் அதிகாலை 2.30 மணியளவில் அவரது வீட்டிலிருந்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட சம்பவத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி வன்மையாக கண்டித்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

குடாநாட்டில் இயல்புநிலை திரும்பி விட்டது என்று கூறப்படும் இந்தக்கால கட்டத்தில் ஆட்கடத்தல்களும், அச்சுறுத்தல்களும் சட்டத்தின் பிடிக்கு அப்பால் எந்தவித தடையுமின்றி அரங்கேறுவது மக்களின் அடிப்படை உரிமைகளையும், சுதந்திரமான வாழ்வையும் அச்சுறுத்தும் செயலாகவே பார்க்க வேண்டும்.

இப்படியான ஆட்கடத்தல்கள் சமூகத்திலுள்ள ஏனையவர்களுக்கு விடப்படும் எச்சரிக்கை செய்தியாகவே இதனைப் பார்க்கலாம்.

மேலும் இவ்வாறான அராஜகங்கள் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பதனையே இந்த நிகழ்வு வெளிப்படுத்துகின்றது. காரணம் எதுவாக இருந்தாலும் ஆள்கடத்தல் சட்டவிரோதமானதும் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

பேச்சை பேச்சாலும், கருத்தை கருத்தாலும் சந்திக்க வேண்டும் என்று பேசும் இந்தக்கால கட்டத்தில் ஆட்கடத்தல் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் செயலாகவே உள்ளது.

எனவே கடத்தப்பட்டவரை கண்டுபிடித்து மீட்கவும், இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தவும் காவல் துறையினர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோருகின்றோம் என, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ந–8)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## நல்லகாலம் வருகிறது!



சூழ்நிலைக்குத் தக்கபடி வாழ்வை அனுசரித்து அமைத்துக்கொள்வதுதான் வெற்றிக்கான இரகசியம்.

ஒரு செயலின் பயனில் கருத்துச் செலுத்தும் அதேயளவிற்கு அதைச் செய்யும் முறையிலும் கவனம் செலுத்துவது அவசியம்.

தோல்வியைத்தழுவி உயிர்வாழ்வதைவிட போராடி மாள்வதே மேலானது. நீ ஒரு போதும் அழக்கூடாது.

ஒரு இலட்சியத்தை எடுத்துக்கொண்டு அதற்காக உன்னை அர்ப்பணித்துக்கொள். பொறுமையுடன் விடாமுயற்சி செய்தால் உனக்கு ஆதரவான நல்லகாலம் வரும்.

சுயநலத்துடன் வாழாமல் **நான் அல்லேன் நீயே** எனும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளுங்கள். எல்லா நன்மைகளுக்கும் ஒழுக்கங்களுக்கும் இதுவே அடிப்படைப்பண்பு.

உன்னால் எல்லோருக்கும் சேவை செய்யவேண்டும்.அதுவும் கடவுளின் குழந்தைகளுக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் உனக்குக் கிடைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் வன்முறைக்கு எதிரான வாரத்தை முன்னிட்டு ஓவியப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பெண்கள் வன்முறைக்கு எதிரான வாரமாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாரத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக யாழ். மாவட்ட செயலகமும் பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான குழுவும் இணைந்து ஓவியப் போட்டி நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை கல்வி கற்கின்ற மாணவர்கள் ஒரு பிரிவாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றைய பிரிவாகவும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் ஆண்கள், பெண்கள் மற்றும் பெண்கள் உலகம், பெண்களுக்கு என்று ஓர் உலகம், வன்முறைக்கு எதிரான பெண்களின் சுய எதிர்ப்பு, ஏட்டில் வாழும் பெண் உரிமை எனும் தலைப்புக்களிலும், ஏனையவர்கள் வன்முறையற்ற பெண்கள் உலகம், பெண் எனும் தனி அடையாளம், தன்னைத் தான் கண்டறியும் பெண், பெண்களின் கண்களினூடாக உலகம் எனும் தலைப்புக்களிலும் ஓவியங்களை வரையலாம்.

பாடசாலை மாணவர்கள் அதிபரின் உறுதிப்படுத்தலுடனும் ஏனையவர்கள் தாங்கள் வசிக்கும் பிரதேசத்தின் கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடனும் ஓவியங்கள் அனுப்பப்பட வேண்டும். உறுதிப்படுத்தப்படாத ஓவியங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

இப்போட்டிகளில் இருபாலாரும் வயது வேறுபாடின்றி பங்கு கொள்வதுடன் யாழ். மாவட்டத்தில் வசிக்கும் போட்டியாளர்களே பங்கு கொள்ள முடியும்.


இவ்வோவியங்கள் ஏ 3 தாளில் அமைவதோடு எந்த வகையான வர்ணங்களையும் பயன்படுத்த முடியும். இவ் ஓவியங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

## ஞானசாரியார் கல்லூரிக்கு அதிபர் நியமனம்

யா/ குடத்தனை அ.த.க. பாடசாலையின் அதிபராகச் சேவையாற்றிய பரஞ்சோதி செல்வநாயகம் வடக்குமாகாணக் கல்வியமைச்சினால் கடந்த 14 ஆம் திகதி செயற்படும் படியாக யா/ ஞானசாரியார் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 16 ஆம் திகதி தனது கடமையைப் பெறுப்பேற்றுக் கொண்டார்.

யா/ ஞானசாரியார் கல்லூரியின் அதிபராக இருந்த ச.ஶ்ரீராமச்சந்திரன் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரியாக பதவியுயர்வு பெற்றுச் சென்ற வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழில் சிறப்புப் பட்டமும் (யாழ். பல்கலைக்கழகம்) மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் எம்.ஏ. பட்டத்தையும் பெற்ற இவர் தனது கல்வி டிப்ளோமா பட்டத்தை யாழ். பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



யுனிசெப் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது. இதன் போது வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி றிசா கொசானியுடன் கலந்துரையாடுவதையும் அருகில் அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

## வைகோ தயாரித்த ஈழத்தில் இனக்கொலை குறுந்தகடு வெளியீடு

ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தயாரிப்பில் உருவான ஈழத்தில் இனக் கொலை இதயத்தில் இரத்தம் என்ற தலைப்பிலான வீடியோ குறுந்தகடு , புத்தகம் ஆகியவற்றின் ஹிந்தி பதிப்பு நேற்றைய தினம் வெளியிடப்பட்டது.

டில்லியில் உள்ள இந்திய இஸ்லாமிய கலாசார மையத்தில் மாலை 6 மணிக்கு முன்னாள் மத்திய சட்ட அமைச்சரும் மாநிலங்களவை உறுப்பினருமான ராம் ஜெத்மலானி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

புத்தகத்தை டில்லி உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ராஜேந்திர சச்சார் வெளியிட மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான குல்தீப் நய்யார் பெற்றுக் கொண்டார். (அ-2)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு இன்றேல் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன்

### அடைக்கலம் எம்.பி. தெரிவிப்பு

தேசிய பிரச்சினைக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அரசாங்கத்தினால் தீர்வு முன்வைக்கப்படாவிடின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டமொன்றை மேற்கொள்ளப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கிலுள்ள தமிழர்களின் சுதந்திரத்துக்காக தன் உயிரைத் தியாகம் செய்ய தயங்கமாட்டேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மக்கள் பலவிதமான போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று தெரிவித்த அவர் வடக்கில் நடைபெற்ற யுத்தத்தின் போது தான் மயிரிழையில் உயிர்த்தப்பியதாகவும் சிவசக்தி ஆனந்தன் மற்றும் முருகேசு சந்திர்குமார் எம்.பீக்களும் இதேபோன்ற அனுபவத்தினைப் பெற்றுள்ளனர் என்றும் அவர் கூறினார். (அ-2)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
செல்வி அருளையா
அருள்கலா
அவர்களின்
அன்புத் தந்தையார்
கனகசபை
அருளையா
அவர்கள் 23.11.2002
அன்று காலமானார்.



அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதுடன்
அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(1040) கல்லூரிச் சமூகம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## மீள்கேள்வி அறிவித்தல் - 2013

கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள்,
கருவாட்டுக்கடைக்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2012.11.28 - 2012.12.06 பி.ப 03.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 2012.12.07 பி.ப 12.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி : 2012.12.07 பி.ப 02.00 மணி

| இல | குத்தகை விவரங்கள் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) |
|---|---|---|---|---|---|
| 01 | சத்தியகாட்டுச் சந்தை | | 1,042,910.00 | 5000.00 | 1000.00 |
| 02 | பல்லசுட்டிச்சந்தை | | 11,599.50 | 500.00 | 250.00 |
| 03 | தொல்புரம் மத்திய சந்தை | | 13,585.00 | 500.00 | 250.00 |
| 04 | சத்தியகாட்டு மாட்டிறைச்சிக்கடை | 100.00 | 12,540.00 | 500.00 | 250.00 |
| 05 | சத்தியகாட்டு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 3,135.00 | 500.00 | 250.00 |
| 06 | சங்கானை மரக்கறிச்சந்தை | | 5,643,000.00 | 10000.00 | 1000.00 |
| 07 | சங்கானை மீன்சந்தை | | 1,155,770.00 | 5000.00 | 1000.00 |
| 08 | சங்கானை ஆட்டிறைச்சிக்கடை | 150.00 | 53,390.00 | 2000.00 | 500.00 |
| 09 | சங்கானை கருவாட்டுக்கடை | 100.00 | 21,137.50 | 1000.00 | 500.00 |
| 11 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | | 57,000.00 | 2000.00 | 500.00 |
| 12 | சங்கரத்தை சந்தை | | 142,500.00 | 3000.00 | 750.00 |
| 13 | கோழி இறைச்சிக்கடை, சங்கரத்தை | 100.00 | 18,810.00 | 1000.00 | 500.00 |
| 14 | வண்ணபுரம் தற்காலிக சந்தை | | 8,835.00 | 500.00 | 250.00 |


குறிப்பு:- மேலதிக விபரங்களை 08.11.2012, 10.11.2012 ஆம் திகதிய தினக்குரல் மற்றும் உதயன் பத்திரிகைகளில் பார்வையிடவும்.

வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம். 27.11.2012 (சி-1621)

திருமதி.நா.ஐங்கரன்
தவிசாளர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை அடக்கி இங்கிலாந்து வெற்றி



இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்குமிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இதன்படி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2 போட்டிகளின் பின்னர் இங்கிலாந்து அணி 1-1 என்ற கணக்கில் சமப்படுத்தியுள்ளது.

மும்பையில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி புஜாராவின் 135 ஓட்டங்கள், ரவிச்சந்திரன் அஸ்வினின் 68 ஓட்டங்களின் துணையோடு 327 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக மொன்ரி பனசர் 5 விக்கெட்டுகளையும் கிரேம் ஸ்வான் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலளித்தாடிய இங்கிலாந்து அணி கெவின் பீற்றர்சனின் 186 ஓட்டங்கள், அலஸ்ரெயர் குக்கின் 122 ஓட்டங்களின் துணை யோடு 413 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இந்திய அணி சார்பாக பிரக்ஜன் ஓஜா 5 விக்கெட்டுகளையும், ரவிச்சந்திரன் அஸ்வின், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

மீண்டும் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 142 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்திய அணி சார்பாக கௌதம் காம்பீர் மாத்திரம் சிறப்பாக ஆடி 65 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக மொன்ரி பனசர் 6 விக்கெட்டுகளையும் கிரேம் ஸ்வான் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

57 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 9.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது.

நிக் கொம்ப்ரன் 30 ஓட்டங்களையும், அலஸ்ரெயர் குக் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணி சார்பாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கெவின் பீற்றர்சன் தெரிவானார்.

# ஆஸி-தென்னாபிரிக்க போட்டி சமநிலையில்

அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2ஆவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைந்துள்ளது.

தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்ட வீரர்கள் போராடி இந்த வெற்றி தோல்வியற்ற முடிபை பெற்றுக் கொண்டனர்.


அடிலெய்டில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மைக்கல் கிளார்க்கின் 230 ஓட்டங்கள், டேவிட் வோர்னர், மைக்கல் ஹசி ஆகியோரின் சதங்களின் உதவியுடன் 550 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்னி மோர்கல் 5 விக்கெட்டுகளையும் ஜக் கலிஸ், டேர் ஸ்ரெயின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி கிரேம் ஸ்மித்தின் 122 ஓட்டங்கள், டுப்பிளிசிஸ், ஜக் கலிஸ், அல்விரோ பீறறர்சன் ஆகியோரின் அரைச் சதங்களின் உதவியுடன் 388 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பாக ஹில்பென்ஹஸ் 3 விக்கெட்டுகளையும் நேதன் லையன், பீற்றர் சிடில் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

மீண்டும் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய



அணி 8 விக்கெட்டுகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்று தென்னாபிரிக்க அணிக்கு 430 ஓட்டங்களை வெற்றி இலக்காக வழங்கியது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக மைக்கல் ஹசி அரைச் சதம் ஒன்றை பெற்றுக் கொள்ள பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ரோறி கிளெய்ன்வெல்ட்ற், மோர்னி மோர்கல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், டேல் ஸ்ரெயின் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

430 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுகளை இழந்து 45 ஓட்டங்களையும், 5 விக்கெட்டுகளை இழந்து 134ஓட்டங்களையும் பெற்றுத் தடுமாறிய போதிலும் அறிமுக வீரர் டுப்பிளெஸின் சிறப்பான ஆட்டத்தால் வெற்றி தோல்வியற்ற முடிபை பெற்றது.

அவ் வணி இறுதியில் 8 விக்கெட்டுகளை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக டுப்பிளெஸிஸ் 376 பந்துகளில் ஆட்டமிழக்காமல்110 ஓட்டங்களையும், ஜக் கலிஸ் 46 ஓட்டங்களையும்,ஏபிடி வில்லியர்ஸ் 220 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக பீற்றர் சிடில் 4 விக்கெட்டுகளையும்,நேதன் லையன் 50 ஓவர்கள் பந்து வீச 31 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 49 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க அணியின் அறிமுக வீரர் டுப் பிளெஸிஸ் தெரிவானார்.

# திணறுகிறது இலங்கை



இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான 2-வது டெஸ்ட் போட்டியின் 2-ம்நாள் ஆட்டம் நேற்றாகும். நேற்றைய நாள் முடிபில் இலங்கை அணி தடுமாற்றத்தை எதிர்கொண்டுள்ளது. 2 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 412 ஓட்டங்களைப்பெற்றது. அவ்வணிசார்பாகபின்வரிசை வீரர்களும் ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக ரெய்லர் 142 ஓட்டங்களையும் வில்லியம்ஸன் 135 ஓட்டங்களையும் டானியல் ஃபிளின் 53 ஓட்டங்களையும் ஜீதன் பட்டேல் 25 ஓட்டங்களையும் டக்பிரேஸ்வெல் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ரங்கண ஹேரத் 6 விக்கெட்டுக்களையும் நுவான் குலசேகர, ரந்தீவ், டில்ஷான், எரங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

அதன் பின்னர் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது போதிய வெளிச்சமின்றி நேற்றைய நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இலங்கை அணி ஒரு கட்டத்தில 3 விக்கெட்டுக்களை இழந்து 12 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியபோது தரங்க பரணவிதான , அன்ஜலோ மத்தியூஸ் இருவரும் பிரிக்கப்படாத 31 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் தரங்க பரணவிதான ஆட்டமிழக்காமல் 9 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி 2 விக்கெட்டுக்களையும் ட்ரென்ட் போலட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## கார்த்திகை...

மும் வருவதால்தான் இந்த தலையீட்டையும் தடைகளையும் இந்துக்கள் எதிர்நோக்குவதாக அவர் கூறுகின்றார்.

குமாராலய தீப நாளிலும் அதனை அடுத்த சர்வாலய தீப நாளிலும் இந்துக்கள் தமது வீடுகளில் தீபம் ஏற்றுதல் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடு செய்தல் வழக்கம்.

இம்முறை அவற்றைத் தடுக்கும் வகையில் இராணுவத்தினராலும் காவல் துறையினராலும் அறிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பல்வேறு தரப்பிலிருந்து தனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

மாவட்ட இராணுவ கட்டளை அதிகாரி, காவல்துறை துணை மா அதிபர் ஆகியோரை சந்தித்து நேரில் முறைப்பாடு செய்ய நேரில் சென்றிருந்த போதிலும் சந்திக்க முடியாத நிலையில் எழுத்து மூலம் அவர்களின் கவனத்திற்கு தான் தெரியப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ந-1)

## குஜராத்...

ஒளிப்படம், இறுதிக்கட்டப் போரின்போது வன்னியில் எடுக்கப்பட்டதாகும்.

அந்தப் படம் இலங்கையின் அகதி முகாம் ஒன்றில் ஐ.நா படப்பிடிப்பாளரால் எடுக்கப்பட்டதாக பா.ஜ.க குற்றம் சாட்டியுள்ளது.

இந்தப்படம் தொடர்பான சர்ச்சை தற்போது சூடுபிடித்துள்ள நிலையில், இதற்கு ஆதரவாகவும் எதிராகவும் இணையத்தில் கருத்துக்கள் பரவி வருகின்றன.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள காங்கிரஸ் கட்சி, அந்தப் படத்தை விமர்சிக்காமல், தமது புள்ளி விபரங்களுக்கு பதிலளிக்க வேண்டும் என்று கூறியுள்ளது. (ந-1)

## மூன்று சடல...

களுக்கான காரணம் தற்கொலையா? அல்லது கொலையா? என்பது பற்றி இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன்னரே இந்த மரணங்கள் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். எனினும், சம்பவம் தொடர்பில் சந்தேகத்திற்குரிய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. (ந-1)

## சட்டமும் ஒழுங்கு...

அனுர பண்டாரநாயக்க அறக்கட்டளையினால் மூன்றாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வுகளில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அதிகார துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு பாரிய அளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. சட்டம் வலுவிழக்கச் செய்யப்பட்டு நாட்டில் ஏதேச் சதிகார தன்மை இப்போது உருவாகியுள்ளது.

சுதந்திரம், ஜனநாயகம் ஆகியன நல்லாட்சியின் மிக முக்கியமான அம்சங்களாகும். எனவே சகல தரப்பினரதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் என்றார்.

மேலும் நாட்டு மக்களின் ஒழுக்கத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டுள்ளார். (ந-1)

# மரண அறிவித்தல்

## அப்பாத்துரை ஞானேஸ்வரன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை ஞானேஸ்வரன் நேற்று (26.11.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் செல்லத்துரை - கனகமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் பாசமிகு கணவரும், பத்மரஞ்சினி (ஜேர்மனி), லகுதாஸ் (ஆசிரியர் - உரும்பிராய் இந்துக் கல்லூரி), கமல்ராஜ், அதீந்திரன் (விமல்) - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மதனமோகன் (ஜேர்மனி), காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனகன் (ஜேர்மனி) மதுவந்தி (ஜேர்மனி), நீரஜன், வேனுஜன், நிருத்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற இராசாத்தி, சிவபாதம், மகேஸ்வரி, ஞானேஸ்வரி மற்றும் சண்முகநாதன், மகாதேவன் (கனடா), பரமேஸ்வரி, சுந்தரேஸ்வரி, திருச்செல்வம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் செல்வராசா (ஓய்வுபெற்ற - அதிபர்), சிவராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாப்பா தோட்ட லேன்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்
ஞா. லகுதாஸ் (மகன்)
ஆசிரியர் - உரும்பிராய் இந்துக்கல்லூரி.

(1049)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்டி விற்ற...

பகுதியில்சுட்டிவிளக்குகள்2ரூபாய்50சதம்முதல் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வந்தன. ஒரு வியாபாரி மட்டும் விளக் கொன்றை 2 ரூபாய்க்கு விற்பனை செய்து வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த இடத்திற்கு வந்த சிலர் தங்களை அதிகார்ம்மிக்கவர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டு மாவீரர் தினத்திற்காகவா 2 ரூபாய்க்கு சுட்டி விளக்கு களை மலிவாக விற்பனை செய்கின்றீர் என்று கேட்டு அவரை தாக்கியுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் சுட்டுவிடுவோம் என்று அவர்கள் எச்சரிக்கை விடுத்து சென்றுள்ளனர். தாக்குதலுக்கு இலக் கான வர்த்தகர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-11)

## இலங்கை...

சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவரின் சுகநலத்தை கேட்டறிவதற்காக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் அமெரிக்க சென்றிருந்தார். இந்தநிலையில், இந்த வாரமளவில் பிரதமர் இலங்கை வருவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் வரவு, செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதங்கள் நிறை வடையும் வரையில் அமைச்சரவை மீளமைப்பு செய்யப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்படு கின்றன.

இதேவேளை, குறித்த இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் மாதம் இடம்பெற வுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## கடற்றொழிலாளர்...

பின்னால் கடற்றொழில் உபகரணங்கள் பாரிய சேதத்திற்குள்ளாக்கப்படுவதுடன், கடல் வாழ் உயிரினங்களும், வளங்களும் அழிக்கப்படு கின்றன. இதற்கு முக்கிய காரணமாக, காரணி யாக் அமையும் இந்திய இழுவைப் படகுகளின் எல்லை மீறிய வருகையினை ஆட்சேபித்து தடுப்பதற்கு இலங்கை, இந்திய அரசுகளிடம் பல தடவை கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் இன்றுவரை எவ்வித உரிய நட வடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலை யில் ஒன்றுபட்டு ஒரே குரலில் எமது எதிர்ப் பினை இலங்கை-இந்திய, தமிழக அரசு களைக் கோரும் வகையிலான மாபெரும் பேரணி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

இப்பேரணியில் சமாசத்தில் அங்கம் வகித்துவரும் சங்கங்களுக்கும், நிர்வாகிகளுக் கும் இப்பேரணி பற்றிய தகவலை தெரியப் படுத்தி சகல கடற்றொழிலாளர்களும் இதில் பங்குபற்றி ஒருமித்த குரலில், ஒரே தலை மையின் கீழ் அணி திரண்டு கடற்றொழிலா ளர்களின் ஏகோபித்த எதிர்ப்பினை வெளிப் படுத்துவதற்கான இப்பேரணியில் கலந்து கொள்வதற்கு ஆவன செய்துதவுமாறு அன்பு டன் கேட்டுக் கொள்கின்றோம் எனவும் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (ந-11)

# மக்கள் பூரண சுதந்திரத்தோடு மத அனுஷ்டானங்களை கொண்டாடலாம்

### ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட அமைப்பாளர் தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

இந்து மக்கள் பூரண சுதந்திரத்தோடு தமது மத அனுஷ்டானங்களைக் கொண்டாட முடியும் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப் பாளர் கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இந்து மக்களினால் கொண்டாடப்படும் கார்த்திகை திருநாள் (விளக்கீடு) ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தில் கொண்டாடப் படுவது வழமையானதொரு சம்பிரதாயமாகும்.

குமாரலயதீபம், சிவாலயதீபம் எனும் பெயரில் அனுஷ்டிக்கப்படுவது வழமையான தொன்றாகும். இந்து மக்களினால் குமாரலய தீபம் முருகன் ஆலயங்களில் தீபம் ஏற்றி சொக் கபானை என்னும் ஜோதி எரித்துக் கொண்டா டப் படுவதும், மறுநாள் இந்துக்கள் சர்வால யங்களிலும், தமது இல்லங்களில் தீபமேற்றி கொண்டாடப்படுவது வழமை, இதில் எவ்விதத் தடையும் இல்லை என்பதை எமது மக்களுக்கு தெரிவித்துக் கொள்வதோடு குடாநாட்டில்



இந்து மக்கள் பூரண சுதந்திரத்துடன் தங்கள் மத அனுஷ்டானங்களை மேற்கொள்ள முடியும் எனவும், துஷ்பிரயோகங்களுக்கு முகங்கொடுக்காத வகையில் கொண்டாடு மாறும் அவர் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார். (ந-8)

## செயற்கைக்...

அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளனஎன்று சுப்ரீம்செற்நிறுவனத்தின்நிறை வேற்று அதிகாரி விஜித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சீனாவின் சீசாங் செயற்கைக் கோள் ஏவு தளத்திலிருந்து கடந்த 22ஆம் திகதி ஏவப்பட விருந்த மேற்படி செயற்கைக்கோள், சீனா வின் கால நிலை சீரின்மை மற்றும் தொழில் நுட்ப ஆராய்ச்சி காரணமாக ஐந்து நாட் களுக்கு பிற்போடப்பட்டிருந்தது.

இந் நிலையிலேயே இன்றைய தினம் இந்த செயற்கைக்கோள்விண்ணுக்குஏவப்படவுள்ளது எனத் தெரிவித்த விஜித பீரிஸ், இருப்பினும் குறித்த செயற்கைக்கோள் விண்ணுக்கு ஏவப் படும்நேரம் தொடர்பில் இன்றே தீர்மானிக்கப் படும் என்று கூறினார். (ந-11)

## இலங்கை நிலைமை...

தீர்மானம் நிறைவேற்றியிருந்தன. இறுதிக் கட்ட யுத்தத்தின் போதான குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின்இறுதிஅறிக்கைபரிந்துரைகளைஅமுல்படுத்தல்உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

2013ஆம்ஆண்டுமார்ச்மாதம்நடைபெறவுள்ளஐக்கியநாடுகள்மனித உரி மைப்பேரவை அமர்வுகளில் இலங்கைவிவகாரம்குறித்த அறிக்கை ஒன்றை, ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவுள்ளார். இதேவேளை, எதிர்வரும் ஆண்டின் ஆரம்பத்தில் கூட்ட மைப்புபிரதிநிதிகள் அமெரிக்காவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ந-11)

## பிரிட்டிஷ் கவுன்ஸிலின்...

டங்கள் தமது சேவையினைச் செய்து வருகின்றது.

அதுமட்டுமன்றி பிரிட்டிஷ் கவுன்ஸில் தனது கொழும்பு மற்றும் கண்டி கிளைகளின் ஊடாக இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங் களில் பல்வேறு கல்வி மற்றும் கலாசாரத் திட்டங்களை தீவிரமாக நடை முறைப்படுத்தி வருகின்றது.

30 ஆண்டுகால யுத்தத்தின் முடிவைத் தொடர்ந்து, இப் பிரதே சங்களில் பிரிட்டிஷ் கவுன்ஸில் திட்டங்களுக்கான தேவை அதிகரித் துள்ளதுடன், இந்த விடயத்தில் அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் நிறு வனப் பங்காளிகளின் ஆதரவும் வலுவடைந்துள்ளது.

தரமான ஆங்கில மொழி கற்பித்தலும் பயிற்சியுமே உலகெங்கும் பிரிட்டிஷ் கவுன்ஸிலினால் மேற்கொள்ளப்படும் கல்விப் பணிகளில் முக்கியமானதாகும்.

2006-ம் ஆண்டிலிருந்து பிரிட்டிஷ் கவுன்ஸில் தனது **STEPS (Skills Through English for Public Servants)** வேலைத்திட்டத்தின் மூலம் வடக்குக் கிழக்கிலுள்ள 3 ஆயிரத்து 500க்கு மேற்பட்ட அரச ஊழி யர்களுக்கு ஆங்கிலப் பயிற்சியை அளித்துள்ளது.

இது ஜி.ஐ.இஸட் என்ற ஜேர்மன் அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைப் பின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு வேலைத்திட்டமாகும். இதனைத் தவிர, கல்வி அமைச்சினதும் யாழ்ப்பாணம் பிராந்திய ஆங்கில உதவி நிலையத்தினதும் நெருங்கிய ஒத்துழைப்புடன் 100க்கும் மேற் பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கவுன்ஸில் யாழ்ப்பாணத்திலுள்ள பங்காளிகளின் ஊடாக பல்வேறு பிரிட்டிஷ் கல்வித் தகைமைகளையும் நிர்வகிக் கின்றது. பிரிட்டிஷ் கவுன்ஸிலின் "வகுப்பறைகள் இணைக்கும்" திட் டத்தின் கீழ் யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப் பிலுள்ள 30க்கும் மேற்பட்ட பாடசாலைகள் பிரிட்டனிலுள்ள பாடசாலை களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டம் உள்நாட்டுப் பாடசாலைகளின் பாட விதானங்களில் சர்வ தேசத் தன்மையை ஊக்குவிப்பதுடன், ஆசிரியர்களின் தொழில் நிபுணத்துவ விருத்திக்கும் வழி கோலுகின்றது.

மேலும் யாழ்ப்பாணத்தில் தனது சேவைகளுக்கும் திட்டங்களுக்கு மான தேவை அதிகரித்துள்ளதால், பிரிட்டிஷ் கவுன்ஸில் 2013-ம் ஆண்டில் தனது 3-வது கிளையை யாழ்ப்பாணத்தில் திறக்க முடிவு செய்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## ஆஸி செல்...

விளக்கமறியலில் வைக்குமாறு காலிமேலதிக நீதவான் குணேந்திர குமார உத்தரவிட்டுள் ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வர்களில் சிறு வர்கள் அறுவரும் எட்டுப் பெண்களும் அடங்கு கின்றனர். விளக்கமறியலில் வைக்கும் போது குழந்தைகளை பெற்றோர்களிடமிருந்து பிரிக்க வேண்டாம் என்று நீதவான் உத்தரவிட்டுள் ளார். (ந-11)

## மகிந்தவுக்கு...

வகையில் ஆர்ப்பாட்டத்தை நடத்த அரச சார் பற்ற அமைப்புக்கள் தீர்மானித்திருந்தன.

எனினும் தற்போது அது விலக்கிக் கொள் ளப்பட்டுள்ளதாக அரசசார் பற்ற அமைப்புக் களின் சார்பில் கோலாலம்பூரில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் எம்.ஐ.சி. அமைப்பின் தலைவரான ரி.மோகன் தெரிவித்துள்ளார். (ந-11)

## 'எத்தனை தடைகள் வரி...

அவை காணாமல் போயிருந்தன. அந்தச் சுவரொட்டிகளில் பின்வரும் வாசகங்கள் காணப்பட்டன. 'போராட்ட வடிவங்கள் மாறலாம் ஆனால் போராட்ட இலட்சியங்கள் மாறப்போவதில்லை.' 'எத்தனை தடைகள் வரினும் எமது மாவீரர்களின் இலட்சியத்தை மீட்டெடுப்போம் என உறுதி எடுத்துக்கொள்வோம்.'

'விழவிழ எழுவோம் புலிகளின் வீரத்திற்கு எல்லை உண்டா?'

'அண்ணனின் வழியில் நின்று தமிழீழத்தை நாம் மீட்போம்' போன்ற வீர வாசகங்கள் அந்த சுவரொட்டிகளில் காணப்பட்டன. அந்த சுவரொட்டி களின் கீழே தமிழீழ இளையோர் அமைப்பு, புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் நேற்றைய தினம் வழமையைவிட புலனாய்வாளர்களின் நடமாட்டங்கள் அதிகரித்துக் காணப்பட்டதாகவும் இன்றைய தினமும் மாவீரர் தினமாகையால் மேலும் இக் கண்காணிப்புகள் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் தெரிவித்த னர். (ந-4)


**CeyLabs Solutions (Pvt)Ltd.** Cey Labs
204,Brown Road, Jaffna.
Hot Line: 021 222 1807 General: 077 251 7223
Web:www.ceylabs.com Email:contact@ceylabs.com

மலரவிருக்கும் புதுவருடத்தில் உங்கள் வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக்க, ஒழுங்கமைக்க நாம் உங்களுக்கு வழங்கும் எமது மென்பொருட்கள்.

1) Stock Control & Billing Systems
For * Phone Shops * Jewellery Shops * Farms * FoodCities * Textile Shops * Pharmacies * Foot Wear Shops

2) Patient Tracking Systems
For * Dispensaries * Private Hospitals * Government Hospitals

3) Booking Systems
For * Bus Booking * Theater Booking

4) E-Learning Systems
For * Institutes

5) E-Commerce Systems
For * Shops

6) Document Management & Tracking Systems
For * DS Offices * Pradeshiya Sabha * GS Divisions * Boards & Depts
(1046)



# டோஹா கட்டாரில் (Doha,Qatar) உடனடி வேலைவாய்ப்பு

பிரசித்தி பெற்ற நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் (SLBFE) அங்கீகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தினூடாக 30 இற்கும் அதிகமான உடனடி வேலைவாய்ப்புக்கள். எதிர்வரும் டிசெம்பர் மாதம் 1, 2 ஆம் திகதிகளில் No.24, Station Road, Vavuniya இல் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
உங்களது கடவுச்சீட்டு (Passport), 4 போட்டோ (Photo) தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் அதன் (Photo Copy) பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

| Job | Salary (Q.R) |
|---|---|
| மேஷன் (Mason) | 1200-1500 |
| இலக்ரிஷியன் (Electrician) | 1200-2000 |
| கார்பென்டர் (Carpenter) | 1200-1500 |
| பெயின்டர் (Painter) | 1000-1200 |
| கம்பிக் கூடு கட்டுபவர்கள் (Steel Fixer) | 900-1000 |
| உதவியாளர்கள் (Helpers) | 900-1000 |
| சுத்திகரிப்பாளர்கள் (Cleaners) | 800-900 |
| சமையல்செய்பவர் (Cook) | 1000-1200 |
| கணக்காளர் (Accountant) | 1200-2000 |
| சாரதிமார்கள் (Drivers) | 1200-1600 |
| A/C Technician | 1200-2000 |
| Welders | 1200-2000 |
| Marketing | 1200-4000 |
| தோட்ட வேலையாளர் (Gardener) | 800-1000 |
| அலுமினியம் பிட்டர் (Aluminium Pitter) | 1000-1500 |
| Laundry man | 1000-1200 |
| Auto Electrician | 1200-1500 |
| Auto Tinker | 1200-1500 |
| Auto Machanic | 1500-2000 |
| Auto Spray Painter | 1200-1500 |
| Gypsum worker | 1200-1500 |
| Security Gard | 1200-1500 |

**சலுகைகளும் விதி முறைகளும்**
* தங்குமிடம் இலவசம் * காப்புறுதி இலவசம் * மருத்துவ வசதி இலவசம்
* போக்குவரத்து இலவசம் * மேலதிக நேரம் உண்டு
* நாளாந்த வேலை நேரம் 8 மணித்தியாலங்கள்
மற்றும் அனைத்து நிபந்தனைகளும் விதிமுறைகளும் Qatar நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்டதாகும்
(C-1622)

குறிப்பு: டிக்கட் பியூரோ உட்பட விசா கிடைத்தவுடன் மொத்த கட்டணமாக ரூபா 60,000 மட்டுமே அறவிடப்படும்.

**AIR TRUST**
Tel : 011-2676777, 077-7245438,
Overseas Man Power Consultant
# 985 1st Floor Maradana Road, Borella, Colombo - 08.
1 ஆம், 2ஆம் திகதிகளில் Lanka Voice, No.24, Station Road, Vavuniya.Tel:0750650084
L.L.No.2490



# MOBILE PHONE REPAIRING COURSE

நீங்கள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை செய்ய எதிர்பார்ப்பவரா? வேலைசெய்து கொண்டு பகுதி நேரமாக வருமானம் ஈட்ட வேண்டுமா?

உங்கள் எதிர்காலத்திற்கு......
மாதம் 150,000/-க்கு மேல் வருமானம்
பெறும் நிரந்தர தொழில் வாய்ப்பு
சர்வதேச தரத்திலான டிப்ளோமா சான்றிதல்

திருத்தும்துறையில் பத்து வருடம் அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 1000 க்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதல்தர ஆசியர்
**Ganesh.K**
கட்டணம் 9500/=

- பாடநெறிக்கு செலுத்திய கட்டனத்தை முதல் மாதத்திலே சம்பாதித்துகொள்ள முடியுமா முதலீடு
- நவீனமான *MOBILE* போன் *REPAIR* பன்னும் முறைகள் பயிற்றுவிக்கப்படும்.
- மிககுறைந்த செலவில் மிக சிறிய இடத்தில் மிக குறைந்த முதலீட்டில் ஆரம்பிக்கக்கூடிய ஒரு சிறந்த சுயதொழில்

(சி-1624)

**4 Days Course** 5 வது நாளில் தொழிலை ஆரம்பிக்க உங்களுக்கு 100% நாங்கள் உத்தரவாதம் வழங்குவோம்.
பதிவுகளுக்கு விரையுங்கள்

28வது பிரிவு வவுனியாவில் ஆரம்பம்.
**SUN BRITISH COLLEGE**
No:-26, Station Road, Vavuniya.
T.P:-0770 58 46 58, 024 2226649

15வது பிரிவு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்.
**IISEEES NALLUR CAMPUS**
No:-762, Point Petro road, Nallur,Jaffna.
T.P:-0777444225, 021 222 4728


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.